விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை (14.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

WESTERN UNION WU
moving money for better
உலகெங்கும்முள்ள
உறவுகளுக்கு தரித நாமல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-4659)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# பாராளுமன்ற கலைப்பு
# செல்லுபடியற்றது
## உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைப்பதாக தெரிவித்து வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பானது செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது. மேலும் ஜனாதிபதி வழங்கிய உத்தரவானது 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுடன் ஒப்பந்தம் இல்லை
### இரா.சம்பந்தன்



24

## அரசிலிருந்து விலக நாங்கள் தயார்
### மகிந்த அணியினர் அதிரடி முடிவு

(கொழும்பு)

அரசில் இருந்து விலக தாங்கள் தயாராக இருப்பதாக மகிந்த தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 23

## நீதி மன்றத்தின் தீர்ப்பை ஜனாதிபதி ஏற்பார்
### தீர்ப்பு குறித்து ரணில் கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி நீதியரசர்களின் தீர்ப்பிற்கு உரிய மதிப்பை வெளியிட்டு அதனை ஏற்றுக்கொள்வார் என ஐக்கியதேசிய கட்சி 23



## நீதிமன்ற தீர்ப்பை மதிக்கின்றேன்.
# ரணிலுடன் இணைந்து
# பணியாற்ற தயாரில்லை
### ஜனாதிபதி தெரிவித்ததாக லஷ்மன் யாப்பா

(கொழும்பு)

நீதிமன்றின் தீர்ப்புக்கு மதிப்பளிக்கின்றேன். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்க மாட்டேன். அதில் எந்த மாற்றமும் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் யாப்பா தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக குற்றப் பிரேரணை
### ஜே.வி.பி. முடிவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை கொண்டுவர முடிவு செய்துள்ளது.

பாராளுமன்றத்தை கலைத்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு நேற்று வெளியானது.

அதில், பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசியலமைப்புக்கு விரோதமானது 02

## புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை எதிர்வரும் திங்களன்று நியமிக்கப்படும்
### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்

(கொழும்பு)

புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையைஎதிர்வரும்திங்கட்கிழமை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நேற்றிரவு இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார் 02



## முச்சக்கர வண்டியுடன் மோதியதில் குடும்பஸ்தர் பலி
### மாலு சந்தியில் சம்பவம்

(கரணவாய்)

முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்திற்குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை மாலை 5.45 மணியளவில் வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான வைரமுத்து 02

## மைத்திரி - மகிந்த சூழ்ச்சிக்கு எதிராக சிறந்த தீர்ப்பு
### அநுர குமார திசாநாயக்க

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தினால் கிடைக்கப்பெற்ற தீர்வினை 23

## ஜனாதிபதி மைத்திரிக்கு 24 மணித்தியாலங்கள்
### காலக்கெடு விதித்த ஐ.தே.க

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி 24 மணித்தியாலங்கள் காலக்கெடுவை விதித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக் 23

## பிரதமராகிறார் ரணில்?
# கடும் கோபத்துடன் ஜனாதிபதி இணக்கமாம்!

(கொழும்பு)

பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர 23

## முச்சக்கர வண்டி...

இராசரத்தினம் (வயது- 50) என்பவரே உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த அக் குடும்பஸ்தர் மாலி சந்தியினால் அல்வாய் பகுதிக்கு திரும்ப முற்பட்ட போது முச்சக்கரவண்டியுடன் மோதுண்டார்.

தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களில் அவர் உயிரிழந்தார். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டனர். (ம-60)

## ஜனாதிபதி மைத்...

என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பத்திரிகையை கொண்டுவர மக்கள் விடுதலை முன்னணி முடிவு செய்துள்ளது. (ம)

## புதிய பிரதமர் மற்...

என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாந்த முத்துகெட்டிகம கூறினார்.

நாட்டுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை தடுக்கவே தான் பாராளுமன்றத்தைக் கலைத்தேன் என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் செல்லையா பஞ்சலிங்கம்

கடந்த 13.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தின் தந்தை செல்லையா பஞ்சலிங்கம் அவர்களின் 31-ம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.772, கோவில் வாசல்,
இணுவில் சந்தி,
இணுவில் மேற்கு, இணுவில்.

- குடும்பத்தினர்
021 205 4403

(7887)


# வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி

யாழ். நகரில் முதல்முறையாக அனைத்து வாடிக்கையாளரதும் தேவை கருதி இன்றிலிருந்து எமது நிறுவனம் 24 மணித்தியால சேவையை வழங்குவதுடன் இன்றிலிருந்து 3 நாட்களுக்கு ரூபாய் 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவும், ரூபாய் 5000/=இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவுடன் எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்றளவுக்குள் வசிப்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

முக்கிய குறிப்பு: தொலைபேசியூடாகவும் பொருட்கள் ஓடர் செய்யலாம்.
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது : அங்கர், சீனி, மா தவிர்ந்த பொருட்கள்)

**SUNJEYS A to Z SUPER MART**
100, Arasady Road, Jaffna.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
**021 205 3077**

(C-4696)


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி நாகேஸ்வரி விஜயராசா (நாகேஸ்)

எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.சுந்தரசிவம் அவர்களின் அன்புத் தங்கை அமரர் நாகேஸ்வரி விஜயராசா அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி-4691)





e-fluent **INTERNATIONAL** புதிய வருகை
**BUSINESS (PVT) LTD.**

நிகழும் விளம்பி வருடத்தில் 14.12.2018 இன்று 9.30 - 10.40 இற்கு இடைப்பட்ட நேரத்தில் சதய நட்சத்திரமும் ஸப்தமி திதியும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் **SUNJEY'S HOLDINGS** நிறுவனத்தினரின் (இல.98, அரசடி வீதி யாழ்ப்பாணம், யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)

நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மதிப்புக்குரிய சட்டத்தரணியும் யாழ் மாவட்ட இறைவரி ஆணையாளருமாகிய **பந்துல ஹப்புதந்திரிகே** அவர்களும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமாகிய உயர்திரு. **இ.இளங்கோவன்** அவர்களும் கலந்து கொள்வார்கள். இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்
இப்படிக்கு : உரிமையாளர் லயன் அருள் ஜெயந்திரன்
**SUNJEY'S HOLDINGS**, இல.98, அரசடி வீதி யாழ்ப்பாணம்.
077 386 4077, 077 747 4111

நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு
உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்
**75,000** ரூபா மட்டுமே





| DESCRIPTION OF BIKE | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

**#0.30/- சதம் 1 Km இயங்கும் செலவு**

(C-4696)


# மரண அறிவித்தல்



## நடராஜா இராசமலர்

(இயக்குநர் - முத்தமிழ் பேரவை)

யாழ்ப்பாணம் காரைநகர் பாலாவோடையை பிறப்பிடமாகவும், விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமலர் (இயக்குநர்- முத்தமிழ் பேரவை) அவர்கள் நேற்று (13.12.2018) வியாழக்கிழமை காரைநகரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசா (ஸ்தாபகர் - முத்தமிழ் பேரவை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான A.S.ஆறுமுகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான A.S.சங்கரப்பிள்ளை, A.S.கந்தையா ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், S.A.இராசலிங்கம், பாலாம்பிகை, S.A.பாலேந்திரன், இந்திராதேவி, வசுந்தராதேவி, காலஞ்சென்ற ரஞ்சனிதேவி, தயாபரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரமதி, கணநாதா, சாரதாமணி, Dr.ஆனைமுகன், நேசேந்திரன், கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சிவசங்கர், Dr.சிவகுமார், Dr.காண்டீபன், சசிவர்ணா, Dr.காயத்ரி, கஜமுகவர்ணன், சண்முகவர்ணன் ஆகியோரின் பெரியம்மாவும், செந்தாமரை, அறிவழகன், அருள்மொழி, அருட்செல்வி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

(சி-4689)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைக்கப்போவதாக போலிப்பிரசாரம்

## ஐ.தே.க.பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பதாகவோ அப்பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுவதாகவோ, பௌத்த விகாரைகளை அகற்றுவதாகவோ இல்லை என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார். அத்தோடு திட்டமிட்டு இனவாதத்தைத் தூண்டும் வகையில் போலிப்பிரசார நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



அலரி மாளிகையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு மறுப்புத் தெரிவித்ததன் காரணமாகவே அவர் மகிந்த தரப்பிற்குச் சென்றார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன எமது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ அல்ல என கோத்தபாய ராஜபக்ஷ எனத் தெரிவித்துள்ளார்.

எனவே ஜனாதிபதி தற்போதுநெருக்கடிக்குள்உள்ளார் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு ஐ.தே.மு 117 பெரும்பான்மையை காண்பித்துள்ளது.

எனவே தற்போது அரசாங்கத்தை எம்மிடம் ஒப்படைப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு மாற்று வழி எதுவுமில்லை. அது எந்த சந்தர்ப்பத்திலும் இடம்பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கை- சிங்கப்பூர் உடன்படிக்கை அறிக்கையை உடன் வெளியிடுங்கள்

## ஜனாதிபதிக்கு ஐ.தே.க.சவால்



இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேராசிரியர் டபிள்யூ.டீ.லக்ஷ்மன் தலைமையிலான குழுவின் அறிக்கையை வெளியிடுமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதிக்கு சவால் விடுத்தார்.

சிங்கப்பூருடனான உடன்படிக்கை நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்த நிலையிலேயே ஹர்ஷ டி சில்வா நேற்று முன்தினம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த ஹர்ஷ, "இலங்கை-சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நாட்டிற்கு சாதகமானதா? அல்லது பாதகமானதா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், பேராசிரியர் டபிள்யூ.டீ.லக்ஷ்மனின் அறிக்கைக்காக அனைவரும் காத்திருக்கின்றனர்.

சிங்கப்பூர் உடன்படிக்கை ஊடாக நாட்டின் பொருளாதாரம் தவறாக திசைதிருப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தொலைக்காட்சி உரையொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சிங்கப்பூர் உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாகவும், இந்த உடன்படிக்கை நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என பேராசிரியரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள விடயங்களை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு பந்துலவிற்கும் ஜனாதிபதிக்கும் நாம் சவால் விடுகின்றோம் என ஹர்ஷ தெரிவித்தார். (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை இல்லை

## தினேஷ் குணவர்த்தன உறுதி

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை இல்லை என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



117 வாக்குகள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டாலும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையாது என அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ரணில் விக்கிரமசிங்கவுக்கு 117 உறுப்பினர்கள் ஆதரவு என்ற நிலையிலிருந்து 103 ஆக குறைவடைந்துள்ளது.

மனோ கணேசன், திகாம்பரம், ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோர் இணைந்தும், 103 உறுப்பினர்களின் ஆதரவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது.

அவ்வாறாயின் பெரும்பான்மை இல்லை என்பது இதனூடாக தெளிவாகின்றது என தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (இ-7)

# மதிப்பீட்டுப் பணிகள் 23-ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

இவ் வருடத்திற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் வினாத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகளானது எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக முதலாம் கட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளை இம் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து ஜனவரி மாதம் முதலாம் திகதி வரையும், இரண்டாம் கட்ட மதிப்பீட்டு நடவடிக்கையானது ஜனவரி மாதம் 07 ஆம் திகதியிலிருந்து ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்ட மதிப்பீட்டு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்புரோயல்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-7)

# அரசியல் நெருக்கடிக்கு மத்தியிலும் சீனத் திட்டங்கள் இடைவிடாது முன்னெடுப்பு



(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நீடித்துவருகின்ற அரசியல் அதிகார நெருக்கடி நிலைக்கு மத்தியிலும் தமது அபிவிருத்தித் திட்டங்கள் எதனையுமே நிறுத்தாமல் முன்னெடுத்துவருவதாக இலங்கைக்கான சீனத்தூதரகத்தின் அரசியல் பிரிவுத்தலைவரும் பேச்சாளருமான லூவோ சொங் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்தின் முதலாம் கட்டம் பூர்த்தியடைந்துவிட்டது. அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளோம். அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைத்தவிர தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை சீனாவிலிருந்து இலங்கை வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை எந்தளவிலும் குறைத்துவிடவில்லை எனக் குறிப்பிட்ட சீனத்தூதரக அரசியல் பிரிவுத்தலைவர் உண்மையில் எண்ணிக்கை அதிகரித்துள்ளதெனத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நட்பு அனைத்து சோதனைகளையும் கடந்து காலத்தால் நீடிக்கின்ற உன்னதமான நட்பு என தெரிவித்த அவர் யார் ஆட்சியில் இருந்தாலும் சீனா இலங்கை மக்களுடனான நட்பை தொடர்ந்தும் மதித்து செயற்படும் எனத் தெரிவித்தார். (இ-7)

# யாழில் இனந்தெரியாத நபர்களால் கார் அடித்து நொருக்கப்பட்டது!

## நேற்று அதிகாலைவேளை சம்பவம்




(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம் புறாடி லேன் பகுதியில் நேற்று அதிகாலை 2.25 மணியளவில் வீட்டுக்கு முன்னாள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் இனந்தெரியாத நபர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை இரு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவினர் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட கார் அடித்து நொருக்கப்பட்டதாகவும் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்த போது குறித்த நபர்கள் முகத்தை மூடியவாறு தப்பிச் சென்றதை அவதானித்ததாகவும் வீட்டு உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பேலியகொடையில் மனிதத் தலை மீட்பு

(பேலியகொட)

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துட்டுகெமுனு வீதியிலுள்ள தொழிற்சாலையொன்றின் வளாகத்திலிருந்து மனிதத் தலையொன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசரப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த தலை மீட்கப்பட்டுள்ளது.



இந்தத் தலை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பேலியகொட பொலிஸார் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (இ-7)



# பெர்த்தில் யார் 'கெத்து'

## ஆஸி., - இந்தியா இன்று 2ஆவது மோதல்

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் வேகத்துக்கு சாதகமான பெர்த்தில் இன்று ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் 31 ஓட்டங்களால் வென்ற இந்தியா, தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட், அறிமுக பெர்த் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

**மழை வருமா**

பெர்த்தில் இன்று வெப்பநிலை அதிகபட்சம் 36, குறைந்தபட்சம் 19 டிகிரி செல்சியசாக இருக்கும். இன்றைய முதல் நாளில் வெப்பத் தின தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால், நாணயச்சுழற்சியில் வெல் லும் அணித் தலைவர் துடுப்பாட்டத்தை தேர்வு செய்ய அதிக வாய்ப்பு உள்ளது. மூன்றாம் நாளில் 20 சதவீதம் மழை வர வாய்ப்பு உள்ளது.


# University of Jaffna, sri Lanka
## Faculty of Arts
## Walk-in-interview

Walk in Interview for the appointments of **Temporary Assistant Lecturer/ Temporary Instructor in Art & Design** will be held on **27th December 2018 at 9.30am** in the **Mini Board Room of the Faculty of Arts,** University of Jaffna

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/ Temporary Instructor**

1. A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honours.
   **Or**
2. A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honours.
   **Or**
3. (a) A degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours **and**
   (b) A recognized postgraduate degree in the relevant subject.
4. Candidates who are awaiting results for the final degree examination may also be present.

| Post | Salry Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer/ Temporary Instructor | Rs. 40,324/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the abovementioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and Curriculum Vitae.

**Registrar,** University of Jaffna

# யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



| திருமதி ச.திருஞானச்செல்வன் (ஆசிரியர்) | திரு.சி.சிவராஜன் (அதிபர்) | திரு.தி.சாந்தகுமார் (ஆசிரியர்) |
|---|---|---|

14.12.2018 இன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் வட மாகாண சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் மாகாண நிலை "குரு பிரதீபா பிரபா" விருதுபெறும் எமது அதிபர் திரு.சி.சிவராஜன் அவர்களையும் ஆசிரியர்களான திருமதி ச.திருஞானச்செல்வன், திரு.தி.சாந்தகுமார் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு பண்புத்தரச் சுட்டியின் அடிப்படையில் சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு விருது பெறும் எமது பாடசாலையினையும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் நல்லுறவுக் கழகம், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை**

(7897)

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

தென்னிலங்கையில் தீராத நோயில் படுக்கையில் இருந்தவர்களை கூட எழுந்து நடமாட செய்த அதிசயத்தை நிகழ்த்தியவர் தற்போது யாழ் மக்களுக்காகவும் சேவை வழங்க முன்வந்துள்ளார்.

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி**

பரந்தனில் : 15.12.2018 (நாளை)
யாழ்ப்பாணத்தில் : 22.12.2018

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL**
இல. 125, பிரதான வீதி,
(2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)
யாழ்ப்பாணம்.

**ஐ.ஏ.எஸ்.மருத்துவமனை**
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி, பரந்தன்.

தொடர்பு : 077 444 1082, 077 440 5969

(C-4695)




உயர்திரு.

**கணபதிப்பிள்ளை கணேஸ்வரன்** அவர்கள்

B.A, PGDE, SLPS - I

(அதிபர் - யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை)

இன்று மணிவிழாக் காணும் உயர்திரு. க.கணேஸ்வரன் அவர்களின் கல்விச் சேவையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய இறை அருளை வேண்டுகின்றோம்.

**கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள்**
**நல்லூர் கல்விக் கோட்டம்**

(C-4695)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்து பின்வரும் விபரப்படியான கிளைகளின் கிளைக்குழுக்களினை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களின் 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கீழ் குறிப்பிடப்படும் விபரப்படியான இடங்களில் நடைபெறும்.

| தொ. இல | கிளை பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | மண்டைதீவு | 01 | வ.கிருசாந் | மண்டைதீவு மகா வித்தியாலயம் |
| 02 | மண்டைதீவு | 02 | ஜெ.சதீஸ் | மண்டைதீவு மகா வித்தியாலயம் |
| 03 | அல்லைப்பிட்டி | 03 | வ.நிதர்சன் | கிளைக்கட்டிடம் |
| 04 | மண்கும்பான் | 04 | இ.கஜேந்திரன் | மண்கும்பான் மகா வித்தியாலயம் |
| 05 | ஆலம்புலம் | 05 | ப.தவப்பிரியன் | செட்டிபுலம் அ.த.க.பாடசாலை |
| 06 | தேவிகோட்டம் | 06 | ச.பிறேமிலன் | வேலணை கிழக்கு மகா. வித்தி. |
| 07 | துறையூர் | 07 | பா.குருபரன் | துறையூர் ஐயனார் பாடசாலை |
| 08 | சந்திரா | 08 | க.சசிகரன் | வேலணை கிழக்கு மகா வித்தி. |
| 09 | சிற்பனை | 09 | இ.வேல்குமார் | வேலணை சரஸ்வதி மகா வித்தி. |
| 10 | வங்களாவடி | 10 | நா.ஜெயவதனன் | வேலணை சரஸ்வதி மகா வித்தி. |
| 11 | வேலணை மத்தி | 11 | த.பிரபாகரன் | வேலணை சரஸ்வதி மகா வித்தி. |
| 12 | சோளாவத்தை | 12 | கு.நிசாந்தன் | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 13 | பள்ளம்புலம் | 13 | இ.தனுசன் | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 14 | சரவணை | 14 | க.பரநிரூபன் | சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| 15 | கேணிக்கரை | 15 | ம.கபிலன் | வேலணை மேற்கு நடராசா வித்தி. |
| 16 | அம்பிகைநகர் | 16 | இ.உதயகுமார் | அம்பிகைநகர்கூற்றொழிலாளர்கூசங்கம் |

- கூட்டத்தில் பங்குபெற்ற தகுதியான உறுப்பினர்களுக்கான அழைப்பு கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- அழைப்பு கடிதங்கள் கிடைக்காதவர்களும் தமக்குரிய கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஒப்பம் செல்வி பரீன் ஹஸ்ஸான அப்துல் சமீயூ**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், அலுவலகம்
யாழ்ப்பாணம்.

(C-4698)

# சபாநாயகரின் செயற்பாடுகளால் அரசு செயலற்றுப் போயுள்ளது

## வாசுதேவ எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரியவின் செயற்பாடுகளால் அரசாங்கம் செயலற்றுப் போயுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் அதிகாரங்களை சபாநாயகர் சவாலுக்கு உட்படுத்தியதால், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அரசாங்கம் செயலற்றுப் போயுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு சவால் விடுக்கும் உரிமை சபாநாயகருக்கு கிடையாது. சபாநாயகரின் இந்த செயற்பாடானது அரசியல் அமைப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலானது.

சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகவே செயற்பட்டு வருகின்றார் என்பது அம்பலமாகியுள்ளது என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கட்டடத் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அமரர்கள் லயன் செ.மகாதேவா (ஜே.பி), லயன் சீமாட்டி ம.பூமாதேவி ஞாபகார்த்த கட்டடத் திறப்பு விழா இன்று 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரி வளாகத்தில் அதிபர் "ஸ்கந்தவரோதயன்" மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ''ஸ்கந்தவரோதயன்'' தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக லயன் தேவா பீற்றர் ஆகியோர் கலந்து கொள்வர். இதில் ஆசியுரைகளை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிவப்பிரமஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் (லண்டன்) ஆகியோர் வழங்குவர். (இ-5)

# முன்பள்ளி கலைவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதியினதும் முன்பள்ளியினதும் கலைவிழா நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாலர் பகல் விடுதி மண்டபத்தில் க.பரமானந்தம் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண நன்னடத்தை சிறுவர்பராமரிப்புசேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், யாழ். வலய கல்வித் திணைக்கள முன்பள்ளி அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர்சிகணேசலிங்கம், கௌரவ விருந்தினர்களாக இ.தெய்வேந்திரன் (ஜே.பி), சமூக சேவா ச்ங்க உறுப்பினர் பொ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# "விவசாய நவீனமயமாக்கல் திட்டம்" நடைமுறைக்கு





(கொழும்பு)

விவசாய விளை திறனை அதிகரிப்பதற்கும் உற்பத்தி செலவை குறைத்து நேரடி சந்தை வாய்ப்பையும் இலவசமாக விவசாயிகளுக்கு நவீன உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதற்கு கமத்தொழில் அமைச்சால் "விவசாய நவீனமயமாக்கல் திட்டம்" நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

நவீன விவசாய கலாசாரத்தை நோக்கிய நகர்வு என்னும் கருப்பொருளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்று வரும் விவசாய கண்காட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

நாடளாவிய ரீதியிலான உற்பத்தி பொருட்களையும், நவீன உபகரணங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் கமத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர,பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், நவீன கொள்கை மயமாக்கல் திட்ட அதிகாரிகள் எனப் பலர் இணைந்திருந்தனர்.

இந்த விவசாயக் கண்காட்சி நாளை மறுதினம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விவசாய விளை திறனை அதிகரிப்பதற்கும் உற்பத்தி செலவை குறைத்து நேரடி சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி விவசாய நவீன மயமாக்கல் திட்டமானது கமத்தொழில் அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலவசமாக விவசாயிகளுக்கு நவீன உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு கமத்தொழில் அமைச்சால் இச் சிறந்த கொள்கை திட்டம் விவசாய பெருமக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. (இ-30)

# "துணிவே துணை சிறுவர் கதை" நூல்வெளியீடு ஞாயிற்றுக்கிழமை

(யாழ்ப்பாணம்)

திருச்செல்வம் தவரத்தினம்எழுதிய "துணிவேதுணை சிறுவர் கதை'' நூல் வெளியீடு நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் துருத்தித்தீவில் யாழ்ப்பாண அஞ்சல் அதிபர் கே.நிமலதாசன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ந.சிவானந்தராசா, சிறப்பு விருந்தினராக காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் தி.மயூரன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சோ.நாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கலை இலக்கியப் பெருவிழாவில் "மூத்த கலைஞர்கள் அரங்கம்"

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் இறுதிநாள் (11 ஆம் நாள்) நிகழ்வான "மூத்த கலைஞர்கள் அரங்கம்'' நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புலோலி, புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் பருத்தித்துறைபிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கே.ஜெயக்குமார் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ண குமார், கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் ஏ.என். எஸ். திருச்செல்வம் (ஜே.பி) கலைமாமணி எழுத்தாளர் சி.மார்க்கண்டு ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# நாட்டைப் பாதாளத்திலிருந்து மீட்க ஜனாதிபதி முன்வர வேண்டும்

(கொழும்பு)

ஜனாதிபதியவர்களே இன்னும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம் எனவும், நாடு வீழ்ந்திருக்கும் பாதாளத்திலிருந்து மீட்டுப்பதற்கு இந்தப் பாராளுமன்றத்தில் அதிக நம்பிக்கையை வென்ற ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தனது கட்சி, தான் சார்ந்த குழு, தனது சுயவிருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்காமல் தன்னை நம்பியுள்ள மக்களின் நலனுக்காக தீர்மானம் எடுக்க முன்வருமாறும் ஜனாதிபதியிடம் அவர் கேட்டுக் கொண்டார். நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**மீனம்** — உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப் பட வைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்** — தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**இடபம்** — அரசு வழிச்சலுகைகள் எதிர் பார்த்தபடியே வந்து சேரலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்** — உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கும்பம்** — வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம் மகம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ், சந் | | | ராகு |
| கேது | | | |
| சனி | சூரி, குரு, புத | சுக் | |

**14.12.2018**

கார்த்திகை 28, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

சப்தமி பின்னிரவு 1.42 மணிவரை

சதயம் முன்னிரவு 8.50 மணிவரை

சுபநேரம் 6.21-7.51 மணிவரை

இராகுகாலம் 10.51-12.21 மணிவரை.

திருவெம்பாவை பூஜை ஆரம்பம்

வளவன்

**கடகம்** — மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், கௌரவக் குறைவான நாள்.

**மகரம்** — கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** — புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கனவு பலிதமுண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு** — மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள அனுசரணையாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** — வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** — புதிய சொத்துகளை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** — வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

# காரைநகரில் பரந்து வளர்ந்திருந்த பார்த்தீனியச் செடிகள் அழிப்பு

## மாணவர்கள், மக்களுக்கு விழிப்புணர்வு



(காரைநகர்)

காரைநகர் பெரியடைப்பு -மருதபுரம் வீதியின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த பார்த்தீனியச் செடிகள் அப்பிரதேசத்திலுள்ள மாணவர்கள் மற்றும் மக்களின் உதவியுடன் நேற்று வியாழக்கிழமை காலை அழிக்கப்பட்டன.

குறித்த வீதிப் புனரமைப்பிற்காக வெளி இடத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணுடன் இங்கு பார்த்தீனியம் கடத்தப்பட்டிருந்தது. மண் பறிக்கப்பட்ட இடங்களிலும் அதை அண்டிய பகுதிகளிலும் பார்த்தீனியம் பரந்து வளர்ந்திருந்தது.

காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கத்தின் வழிப்படுத்தலுடனும் மக்களின் உதவியுடனும் இதை அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் முதற்கட்டமாக பார்த்தீனியச் செடிகள் மற்றும் அதன் தாக்கம் தொடர்பாக அப்பிரதேச மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதையடுத்து அப்பிரதேச மாணவர்கள் பார்த்தீனியத்தை அழிப்பதற்கு தாமாகவே முன்வந்தனர்.

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவர்கள் பார்த்தீனியத்தை அழிக்கும் பணியில் வழிப்படுத்தப்பட்டனர். பாடசாலை விடுமுறையை தாங்கள் நல்லதொரு செயற்பாட்டுக்கு செலவிட்டதை எண்ணி அவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

இப்பணியில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.பொன்ராசா, காரை. மேற்கு கிராம உத்தியோகத்தர் சு. ஸ்ரீரமணன், பட்டதாரிப் பயிலுநர் ப.பத்மநாமா ஆகியோரும் பங்குபற்றினர்.

இதேவேளை, காரை. மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சக்கலாவோடை என்ற இடத்தில் உள்ள நடராசா என்பவரின் காணியில் பரந்து வளர்ந்திருந்த பார்த்தீனியம் அவரது உதவியுடன் அழிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி பிரதேச மக்களுக்கு பார்த்தீனியம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விரைவில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

## திருவெம்பாவையை முன்னிட்டு ஈழத்துச் சிதம்பரத்திற்கு யாத்திரை

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவையை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் வருடாந்த பாத யாத்திரை நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் மாதகல் சம்பில் துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நிறைவடையும்.(இ-5)

## யாழ்.சின்மயா மிஷனில் 'திருவாசக முற்றோதல்'

(யாழ்ப்பாணம்)

மாதங்களில் மிகவும் உயர்ந்தது மார்கழி என்பார்கள். அதனால் தான் " மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே கூறியிருக்கிறார். மேலும், அவரே கீதையில், "மார்கழி மாதத்தை தேவர்களின் மாதம்" என்று கூறியிருக்கிறார்.

கடவுளை வழிபடும்மாதம் மார்கழி. அத்தனை சிறப்புக்கள் வாய்ந்தது இந்த மார்கழி மாதம். சிதம்பரத்தில் மார்கழி மாதத்தில் நடைபெறும் ஆருத்ரா தரிசனமும், ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசியும் முக்கியமான விசேடங்களில் ஒன்று.

ஆன்மீக மலர்ச்சிக்கு சிறந்த மாதமாக கருதப்படும் இந்த மார்கழி மாதம் 16.12. 2018 இல் பிறக்கின்றது. இதையொட்டி, யாழ். சின்மயா மிஷன், இல. 09, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் விலாசத்தில் அமைந்துள்ள பிரார்த்தனை மண்டபத்தில் காலை 7 மணிக்கு, "திருவாசக முற்றோதல்" இடம் பெற உள்ளது. இதன் பின்னர் மதியம் மகேஸ்வர பூசை நடைபெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது யாழ்.சின்மயா மிஷன். சிவப் பரம்பொருளைப் போற்றுவோம்....! அனைத்துச் செல்வங்களையும் பெறுவோம் என யாழ். சின்மயா மிஷன் தெரிவித்துள்ளது.(இ)

## ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினால் ஆட்டோக்களுக்கு வாடகைக் கட்டண மீற்றர் பொருத்தும் நிகழ்வு இன்று 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் சம்பிரதாய பூர்வமாக சங்க காரியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படும். ஆட்டோ உரிமையாளர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# காரைநகர் பிரதேச சபை பட்ஜெட் மக்கள் பார்வைக்கு விடப்பட்டதா?

## நிறைவேற்றப்பட்டபின் கேள்வி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டம் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி சபையில் நிறைவேற்றப்பட்ட நிலையில் பொது மக்கள் பார்வைக்கு விடப்பட்டதா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

2019ஆம் ஆண்டிற்கான காரைநகர் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி உறுப்பினர்கள் 11 பேரில் 10 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதாக பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் அப்பாத்துரை தெரிவித்ததோடு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டதா? என்ற கேள்விக்கு கடந்த 5 ஆம் திகதியே பட்ஜெட் சம்பந்தமாக விசேட கூட்டம் கூட்டப்பட்டதாகவும் பெரும்பாலும் 5 ஆம் திகதி மக்கள் பார்வைக்கு விடப்பட்டிருக்கும் என தான் நம்புவதாக தெரிவித்தார்.

இதேவேளை த.தே.ம முன்னணியின் உறுப்பினர் தவமணி பரமானந்தம் வரவு -செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு விடப்படவில்லை எனத் தெரிவித்ததுடன் தனக்கு இவ்விடயம் தொடர்பாக ஒன்றும் தெரியாது எனவும் வேறுயாரிடமாவது கேளுங்கள் எனப் பதிலளித்தார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர் கனகசபை தவமணி கருத்துத் தெரிவிக்கும் போது, வரவு- செலவுத்திட்டம் ஆலோசனைச் சபைக்கு விடப்பட்டதைத் தான் அறிந்ததாகவும் வேறு விடயங்கள் தொடர்பாக தான் அறிந்திருக்கவில்லை எனப் பதிலளித்துள்ளார்.

ஐ.தே.க.உறுப்பினர் கிசோர் தெரிவிக்கும் போது, பட்ஜெட் கடந்த 8 ஆம் திகதி மக்கள் பார்வைக்கு விடப்பட்டிருக்க வேண்டும் எனப் பதில ளித்தார்.

இது தொடர்பாக காரைநகர் பிரதேச சபையின் தவிசாளரைத் தொடர்பு கொண்ட போது, தான் ஒரு வைபவத்தில் நிற்பதாக பதிலளித்தார். பிரதித்தவிசாளரிடம் கேட்ட போது தான் சுகயீனம் காரணமாக வரவு-செலவுத் திட்டக் கூட்டத்துக்கு செல்லவில்லை எனப் பதிலளித்தார். (இ

# இளைஞர் கழக கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

சில்லாலை தெற்கு இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் கலாசார விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் சாந்தை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும்.

சில்லாலை தெற்கு இளைஞர் கழகத்தின் தலைவி ஜெகராசா ஜனனி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சிறப்பு விருந்தினர்களாக சில்லாலை தெற்கு கிராம சேவகர் க. சுதர்சன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் றோ. றஜீபன், ஓய்வு நிலை ஆசிரியரும் சமாதான நீதவானுமாகிய த. குணத்திலகம், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி ஸ்ரீரஞ்சினி இராமநாதன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.தர்மபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சிவஸ்ரீ இன்பராஜக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

இக் கலாசார விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சில்லாலை தெற்கு இளைஞர்கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)



உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தால் அண்மையில் செல்வபுரம் உதய சூரியன் பாலர் பாடசாலை மற்றும் அறநெறி வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியப் பொருளாளர் கிரிசாந்தன், மகாசேனன் ஆகியோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினர். உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் தற்போது வடக்கு மாகாணத்தில் பரவலாக கற்றல் ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சுபேசன்)

## வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் பாரபட்சம்

# வரணி மக்கள் கவலை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வரணிக் கிராமங்களான மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, வடவரணி போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் குறைபாடு காணப்படுவதாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வன்னி இறுதி யுத்தத்தில் தாம் பாதிக்கப்பட்டு குடும்ப உறுப்பினர்களை இழந்தும் காயமடைந்தும் தற்போது இக்கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ளதாகவும் தமது பெயர் இத் தெரிவில் இடம்பெறவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தாம் குடிசை வீடுகளிலேயே வசித்து வருவதாகவும்மழைகாலங்களில்பெரும் இடர்பாடுகளுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் தற்போது வெளிவந்துள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள்தெரிவிலேபெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு புள்ளி அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதிலும் குறைபாடுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதில் ஒரு அங்கத்தவர்களின் பெயரும் இடம் பெற்றுள்ளது. எனவே போர்ச்சூழல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் வறுமைக் கோட்டின் கீழ் பிள்ளைகளுடன் வீடு இல்லாமல் வசித்து வருபவர்களுக்கும் வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுப்பதுடன் வீடு இல்லாத அனைத்துக்குடும்பங்களுக்கும் கட்டம் கட்டமாக பாரபட்சமின்றி வீட்டுத்திட்டத்தினை வழங்குமாறு மக்கள் உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-103)

# ஆட்சி அதிகாரத்திற்காக கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அடிபணிய தயாரில்லை

## லக்ஷ்மன் யாப்பா எம்.பி.திட்டவட்டம்



(கொழும்பு)

ஆட்சி அதிகாரத்திற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அடிபணிய தயாரில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்ட ரீதியானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால், ஜனாதிபதி கூறியபடி தேர்தல் நடைபெறும்.

மாறாக ஜனாதிபதியின் செயற்பாடு சட்டவிரோதமானது என தீர்ப்பு வெளியாகுமாயின், அதன் பின்னரும் ஆளும் தரப்பில் தொடர்ந்து நீடிக்கும் எதிர்பார்ப்பு எமக்கில்லை. எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பையும் ஏற்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்து ஆட்சி அமைப்பதற்கு நாம் தயாரில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## "குறைந்த பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைக்கக் கோருவது வேடிக்கையாகவுள்ளது"

### மகிந்த யாப்பா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாகாண சபைகளின் அபிவிருத்திகளை முன்னெடுக்க அதிகாரங்களை அதிகரிப்பதற்கான எவ்வித அவசியமும் கிடையாது. வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையாக மக்களுக்காகச் செயற்படுத்தினால் அபிவிருத்திகள் மேம்படும் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தேசிய கலாசார மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கியத் தேசியக் கட்சியினர் தங்களின் அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்ள எந்நிலைக்கும் செல்வார்கள். ரணில் மீதான நம்பிக்கை பிரேரணை அதனை நிரூபித்து விட்டது.



மக்கள் விடுதலை முன்னணியினர் ஒன்றும் அறியாதவர்கள் போல் தற்போது விலகியுள்ளமையும் ஒரு அரசியல் சூழ்ச்சி.

அத்துடன் இன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மை விட குறைவான பெரும்பான்மையினையே கொண்டுள்ளனர்.

கூட்டமைப்பு முறையாக செயற்பட்டிருந்தால் அவர்களின் பெரும்பான்மை 103 ஆகவே காணப்பட்டிருக்கும். அடுத்து அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் கட்டாயம் ஒரு கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணியமைக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் எதிர்க்கட்சி பதவியை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

ஆகவே குறைவான பெரும்பான்மையை வைத்துக்கொண்டு அரசாங்கத்தைக் கையளிக்குமாறு கோருவது வேடிக்கையானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 277 கோடி ரூபாய் ஹெரோயின் விவகாரம்:

## கைதானவர் வீட்டிலிருந்து 59 இலட்சம் ரூபாய் பணமும், 2 செய்மதி தொலைபேசிகளும் மீட்பு

(கொழும்பு)

ட்ரோலர் படகொன்றிலிருந்து நாட்டுக்குள் எடுத்துவரப்பட்ட 277 கோடி ரூபாய்பெறுமதியான ஹெரோயின் தொடர்பில் பிரதான சந்தேகநபராக கைதுசெய்யப்பட்ட ட்ரோலரின் உரிமையாளரின் வீட்டினை சோதனையிட்ட பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால், போதைப் பொருள் விற்பனையின் போது கிடைக்கப்பெற்ற பணமாக கருதப்படும் 59 இலட்சம் ரூபாய் ரொக்க பணமும் இரண்டு செய்மதி தொலைப்பேசிகளும்மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி போதைத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நாட்டுக்குள் கடத்திவரப்பட்ட 231 கிலோ 54 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ட்ரோலர் படகின் உரிமையாளர் சர்வதேச கடத்தல் வலையமைப்பின் உறுப்பினர் என சந்தேகிக்கப்பட்டு வரும் நிலையில் அவரது வீட்டிலிருந்து 59 இலட்சம் ரூபாவும், இரண்டு செய்மதி தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த சம்பவம்தொடர்பில்கைதுசெய்யப்பட்ட மேலும் இருவர் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த சந்தேகநபரை தொடர்ந்தும் பொலிஸ் காவலில் வைத்து விசாரணைக் குட்படுத்திவரும் நிலையில், சந்தேகநபரது வீட்டிலிருந்து மீட்கப்பட்ட பொருட்களை நீதிமன்றில் ஒப்படைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு திணைக்களம் கோரிக்கை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டின் சில பிரதேசங்களில் மழையுடனான வானிலை தொடரும் எனவும் சில பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில், மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரை அதிகரித்துக் காணப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் நாளை மறுதினம் 16ஆம் திகதி வரை கடலுக்குச் செல்வதை தவிர்க்கும்படி வளிமண்டலவியல் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது. (இ-7)

## நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் செல்லுபடியற்றவை

### மகிந்த அணி நிராகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவான நம்பிக்கை பிரேரணையை ஏற்க முடியாது என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ரணில் மீதான நம்பிக்கைப் பிரேரணை குறித்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "சட்டவிரோத, ஜனநாயகமற்ற நாடாளுமன்றத்தில் இடம்பெறும் எந்த விடயத்தையும் ஏற்றுக்



கொள்ளும் நிலைப்பாட்டில் நாம் இல்லை.

தற்போதைய நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் எந்த விடயமாக இருப்பினும் அவை செல்லுபடியற்றவையாகும். அதுவே, நாம் நாடாளுமன்ற அமர்வுகளை புறக்கணிப்பதற்கான முக்கிய காரணம்.

நாடாளுமன்ற சபாநாயகர் ஐ.தே.கவிற்கு பக்கச் சார்பாகவும், அவர்களின் நிகழ்ச்சி நிரலின் கீழும் செயற்பட்டு வருகிறார்" எனத் தெரிவித்தார். (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 33 ஆவது ஆண்டு நிறைவு கலைவிழா 08.12.2018 சனிக்கிழமை நடைபெற்ற போது பொற்பதி அறிவாலயம் வழங்கிய "வித்தியவாருதி" என்னும் சிறப்பு விருதினை பிரதம விருந்தினர் உயர் திரு L.இளங்கோவன் (ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கோண்டாவில் கிழக்கு மண்ணின் தலைமகனும் கல்விக் கொடையாளனுமாகிய பதிவரோதயன் திரு இராசையா குவேந்திரநாதன் அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம். (7887)

உரிமையாளரும், ஊழியர்களும்

சாருகாஜா கொன்ஸ்ரக்சன்
69.குறோசெற் வீதி,யாழ்ப்பாணம்

யாழுவன்
168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சந்தேக நபர்கள் சி.சி.ரி.வி.கமராவின் உதவியுடன் பொலிஸாரால் கைது

முல்லைத்தீவில் யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலி அறுத்துச்சென்ற இரண்டு சந்தேகநபர்களை சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் பொலிஸார் நேற்றைய தினம் அடையாளம்கண்டு கைது செய்துள்ளனர். சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது.

யுவதி ஒருவர் நேற்று முன்தினம் உடுப்புக்குளம் பிரதான வீதி வழியே சிலாவத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் யுவதியை இடைமறித்து அவர் அணிந்திருந்த பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட யுவதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார். இதன் அடிப்படையில் சிலாவத்தை பிரதான வீதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா பொலிஸாரினால் பரிசோதிக்கப்பட்டது. இதன்போது சங்கிலி அறுத்துச்சென்ற சந்தேக நபர்களை பாதிக்கப்பட்ட யுவதி பொலிஸாருக்கு அடையாளம் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# சர்வமத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் ஒளிவிழா



(மன்னார்)

மன்னாரில் கரித்தாஸ் வாழ்வுதய நிறுவனத்தினால் நடைமுறைபடுத்தப்படும் சர்வமத செயற்பாடுகள் தொடர்பான கிறிஸ்மஸ் ஒளிவிழாவும் அத்துடன் சர்வமத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் கண்காட்சி நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் வாழ்வுதய பணிப்பாளர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மத நல்லிணக்கத்தை எடுத்துக் காட்டும் வகையில் இளைஞர்-யுவதிகளால் உருவாக்கப்பட்ட வரையப்பட்ட சித்திரங்கள், ஆக்கங்கள் அனைத்தும் கண்காட்சியாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (2-281)

# வவுனியாவில் 70 ஆவது ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் நிகழ்வு



வவுனியா பம்பைமடு பல்கலைக்கழக வளாகத்தில் சர்வதேச மனித உரிமைகள் தினம் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா வவுனியா பிராந்திய மனித உரிமைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வவுனியா பம்பைமடு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் "மாணவர்களிடையே மனித உரிமைகள் என்பது பிறப்பிலிருந்து உருவாக்கப்படுகின்றனவா?" அல்லது சலுகையிலிருந்து உருவாக்கப்படுகின்றனவா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக முதல்வர் ரி.மங்களேஸ்வரன் மற்றும் பீடாதிபதி பிரயோக விஞ்ஞானபீடம் சி.குகனேசன், வன்னிப் பிராந்திய மனித உரிமைகள்ஆணைக்குழுவின்பொறுப்பதிகாரி எம்.ஆர். பிரியதர்சன, வவுனியா பிராந்திய காரியாலய சட்டத்தரணி ஆர்.எல். வசந்தராஜா, பல்கலைக்கழக பதிவாளர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பல்கலைக்கழக வளாக மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# போலி தங்க நாணயக் குற்றிகளை ஏமாற்றி விற்றவருக்கு விளக்கமறியல்



போலி தங்க நாணய குற்றிகளை ஏமாற்றி 23 இலட்சம் ரூபாவிற்கு விற்றவருக்கு எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி விசேட பிரிவு பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் நடத்திய விசாரணைகளில் போலி தங்க நாணயகுற்றிகளை ஏமாற்றி விற்றார் என்ற குற்றச்சாட்டில் அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் அவர் வசமிருந்த போலி தங்க நாணயகுற்றிகள், மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பணம், அவரது கார் என்பவற்றுடன் கைது செய்து நேற்று சந்தேக நபரை சான்றுப் பொருட்களுடன் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்கவும் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தவும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் பதுக்கி வைக்கப்பட்ட தங்க நாணயக் குற்றிகள் தன்னிடம் இருப்பதாக ஒருவரிடம் வியாபார ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின்னர் அண்மையில் கிளிநொச்சி புகையிரத வீதியில் வைத்து இரு குழுவினரும் பணத்தைக் கொடுத்து பொருளை மாற்றி உள்ளனர். இதனை அவதானித்த பொலிஸ் விசேட குழு பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் இவர்கள் மீது சந்தேகம் கொண்டு இலக்கங்களை குறிப்பெடுத்து விசாரணைகளை முன்னெடுத்த போதே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .மேலும் இதனுடன் சம்பந்தப்பட்ட இருவர் இருப்பதாகவும் அவரை கைதுசெய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகிறது. (2-312)

# சொட்டு நீர்ப்பாசன முறையில் வாழைப்பயிர்ச் செய்கை



(கிளிநொச்சி)

வடபிராந்தியத்தில்சொட்டு நீர்ப்பாசனமும் தூவல் நீர்ப்பாசனமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நிதி அமைச்சின் கீழ்வரும் கிராமசக்தி திட்டத்திற்கு அமைவாக பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் வாழைச் செய்கைக்காக இலகுபடி தொழில் நுட்பம் ஒன்று பரீட்சாத்தமாக செய்கைபண்ணப்பட்டது.

தேசிய நல்லிணக்க அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசகரும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முன்னாள் ஆலோசகருமான கலாநிதி ஆறுமுகம் கந்தையா,ஓய்வு பெற்ற பொறியியலாளர் சூரியசேகரம் மற்றும் நிதி அமைச்சின் ஆலோசகர் கலாநிதி அகிலன் கதிர்காமரினதும் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடனும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி மாதத்தில் நடப்பட்டு தற்போது அறுவடைக்கு தயாராகவுள்ள ஆராய்ச்சி துண்டத்தில் முதல் அறுவடை அண்மையில் இவ் ஆராய்ச்சிக்குப் பொறுப்பான பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி. சி.ஜே. அரசகேசரியினால் மேற்கொள்ளப்பட்டது. வெற்றிகரமாக இச்சொட்டு நீர்ப்பாசனமுறை இலகுவழியில் மேற்கொள்ள முடியும் என்பதை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. (2)

# ஐக்கிய மதங்களின் ஒன்றியம் மன்னாரில் அங்குரார்ப்பணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தின் அங்குரார்ப்பணம் நேற்று முன்தினம் நடைபெற்றது. மன்னார் மாவட்ட சர்வோதய இணைப்பாளர் சீ.யுகேந்திரா தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு ஐக்கிய மதங்கள் ஒன்றியத்தின் ஆசிய நாடுகளுக்கான இணைப்பாளர் ரவீகந்தகே கலந்து கொண்டு மன்னார் மாவட்டத்திற்கான கிளையை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

ரவீகாந்தகே அறிமுகத்தையும் கொள்கையையும் ஒழுக்க விதிமுறைகளையும் கூறி வைத்தார்.

குறித்த ஒன்றியத்தின் மன்னார் மாவட்டத்திற்கான குழுவின் தலைவராக வண.தர்மகுமாரக் குருக்கள், பொதுச் செயலாளராக துஷ்யந்தன், பொருளாளராக அ.மெடோசன் பெரேரா ஏகமனதாக தெரிவாகினர். அத்துடன் அங்கத்தவர்கள் 16 பேருக்கான சின்னம் சூட்டப்பட்டு இயங்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.


இவ் வமைப்பானது மன்னார் மாவட்டத்தின் சிறுவர்களின் கல்வி,பாதுகாப்பு விடயத்தில் தன்னார்வ ரீதியில் அதிக கவனமெடுக்கும் என்பதில் உறுதியாகச் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# ஆலய சித்திரத்தேருக்கு அச்சு வைக்கும் நிகழ்வு



கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயசித்திரத்தேருக்கான அச்சு வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஆலய வரலாற்றில் முதன் முதலாக 30.6 அடி உயரத்திலும்,12 அடி தள விரிவு கொண்டதும்,14 அடி பந்தல் விரிவுடையதுமான சித்திரத் தேருக்கே அச்சு வைக்கும் நிகழ்வு ஆலய பூசைவழிபாடுகளுடன் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குரு முதல்வர், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தர்மகத்தா ஆறு.திருமுருகன், கிளிநொச்சி சின்மயா மிசன் குரு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஆலய குருக்கள், நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-312-281)











வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா நேற்று புளியங்குளம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். பண்பாட்டு பேரணியில் மாவீரன் பண்டாரவன்னியனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தியும் தமிழர்களின் பண்பாட்டை பறைசாற்றும் சமையல் உபகரணங்கள் ஊர்தியில் கொண்டு வரப்பட்டதுடன் நாதஸ்வர குழுவினர் பொய்க்கால் குதிரை ஆட்டம், காவடி, கோலாட்டம் உட்பட பண்பாட்டு நிகழ்வுகளும் தமிழ் பெரியார்களைப்போன்று வேடமணிந்த சிறுவர்களும் பவனியை அலங்கரித்திருந்தது. இதன்போது மருதமுகில் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பில்

# தமிழ் தலைமைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## வடக்கு மாகாண முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் வலியுறுத்து

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் தொடர்பாக அச்சமும் ஆழ்ந்த கவலையும் எழுந்துள்ள நிலையில் கடந்த வாரத்தில் இரும்பு சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சம் ஒன்று கிடைக்கப்பெற்றது. எவ்வளவு கோரமாக சித்திரவதை செய்யப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு அடிமைகளாக கொல்லப்பட்டு இருக்கின்றார்கள் என்ற உண்மை வெளிவந்துள்ளதாக முன்னாள் வடக்கு மாகாண மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம் சர்வதேச ரீதியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் மன்னார் சதொச மனித எச்சங்களை பார்வையிடுவதற்காக வெளிநாட்டு தூதரக பிரநிதிகள் மன்னார் நோக்கி படையெடுக்க தொடங்கியுள்ளனர்

தொடர்ந்தும் மனித புதைகுழியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை யில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அனந்தி சசிதரன்,

உலகமே வெட்கப்பட வேண்டிய விடயம்.21 குழந்தைகள் உட்பட பல எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. தமிழர்கள் என்ற காரணத்திற்காக கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்ற நிலையில் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வர வேண்டும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

இந்த சம்பவம் எப்போது நடைபெற்றது? இந்த சம்பவத்திற்கு யார் உரியவர்கள்?யாரால் கொல்லப்பட்டார்கள்? என்ற உண்மை வெளிவர வேண்டும்.

வடக்கு- கிழக்கில் இராணுவம் உட்பட முப்படையினரும் வெளியேறிய அனைத்து இடங்களிலும் மனிதப் புதைகுழி இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது

எனவே இவை அனைத்தும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் கண்காணிப்பின் கீழ் மனித புதைகுழிகள் கிளறப்படவேண்டும். இதனூடாக எதிர்காலத்திலாவது ஈழத் தமிழர்கள் இன அழிப்புக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தலைவர்கள் இப்போது தெற்கில் ஏற்பட்டுள்ள இந்த குழப்ப நிலையில் அங்கிருக்கும் பேரினவாத கட்சிகள் எதுவாகவும் நாட்டை ஆண்டுவிட்டு போகட்டும்.ஆனால் எங்களுக்கு இன்றுவரை மனிதப் புதைகுழி தொடர்பாக ஆழமான கருத்தோ அல்லது இறுக்கமான கருத்துக்களோ அழுத்தங்களோ வழங்கப்படாத நிலையில் இந்தப் புதைகுழி தொடர்பான உண்மைகள் வெளிவருவதன் ஊடாக பல முடிச்சுகள்,பல உண்மைகள் வெளிவரும் வாய்ப்புகள் உருவாகும் என்று நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (2-285)

## போதைப்பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் யாழிற்கு இடமாற்றம்

(பனிக்கன்குளம்)

போதைப்பொருள் பயன்படுத்தியதாக பொலிஸ் அதிகாரி ஒருவரை சீருடையுடன் பொதுமக்கள் பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தமையையடுத்து குறித்த பொலிஸ் அதிகாரி நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா வைரவபுளியங்குளம் நெல் களஞ்சிய சாலையில் யாருமற்ற நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சீருடையுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவதையடுத்து அவ்விடத்திற்கு சென்ற ஒருவர் குறித்த பொலிஸ் அதிகாரி போதைப்பொருள் பயன்படுத்தி கொண்டிருந்ததை அவதானித்துள்ளார்.




இது தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், குறித்த பொலிஸ் அதிகாரியை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுவருவதுடன் விசாரணைகள் முடிவுறும் வரை குறித்த பொலிஸ் அதிகாரி தற்காலிகமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (2-281)

# மன்னார் பிரதேசசபையின் பாதீடு நிறைவேற்றம்

(மன்னார்)

மன்னார் பிரதேசசபையின் அடுத்தாண்டுக்கான முதலாவது வரவு- செலவுத் திட்ட அறிக்கையை தவிசாளர் சபையில் முன் வைத்தபோது சபையில் கலந்து கொண்டிருந்த இருபது உறுப்பினர்களும் வரவு-செலவு திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலுள்ள மன்னார் பிரதேசசபையின் ஒன்பதாவது மாதாந்தக் கூட்டம் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது.

இவ் அமர்வில் மன்னார் பிரதேச சபைக்கான அடுத்தாண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் சபையில் முன்வைத்தார்.

இச் சபையில் 21 உறுப்பினர்கள் இருக்கின்ற போதும் அன்றையதினம் நடைபெற்ற இவ் அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ரி.ஜிவானந்தம் சுகயீனம் காரணமாக சபையில் கலந்து கொள்ளவில்லை

ஏனைய இருபது அங்கத்தவர்களும் கலந்து கொண்ட இவ் அமர்வில் தவிசாளரால் வாசிக்கப்பட்ட வரவு-செலவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் பி.கதிர்காமநாதன் முன்மொழிந்தும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் அலியார் சாபீர் வழிமொழிந்து இவ் வரவு- செலவுத் திட்டத்தை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

வரவு-செலவுத்திட்டத்தில் பொது நிர்வாகத்தில் மதிப்பிடப்பட்ட வருமானமாக ரூபா 51,789,937.44 ஆகவும், மதிப்பிடப்பட்ட இதன் செலவீனமாக 27,328,154 ரூபாவாகவும், சுகாதார சேவைகள் மதிப்பிடப்பட்ட வருமானமாக 5,287,190 ரூபாவாகவும், மதிப்பிடப்பட்ட செலவினமாக 20,432,463 ரூபாவாகவும்,பௌதீக திட்டமிடல் மதிப்பிடப்பட்ட வருமான மாக 10,078, 600 ரூபாவாகவும், மதிப்பிடப்பட்ட செலவினமாக 11,967,884 ரூபாவாகவும், தண்ணீர் சேவைகள் மதிப்பிடப்பட்ட வருமான மாக 60,000 ரூபாகவும், மதிப்பிடப்பட்ட செல வினமாக 175,000 ரூபா வாகவும், பொதுப்பண்பாட்டு சேவைகள் மதிப்பிடப்பட்ட வருமானமாக 1,128,100 ரூபாவும்,மதிப்பிடப்பட்ட செலவினமாக 1,000,000 ரூபாவும், நல்ன்புரி சேவைகள் மதிப்பிடப்பட்ட வருமானமாக 51,900 ரூபாவும், மதிப்பிடப்பட்ட செலவினமாக 7,491,976 ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ் உத்தேச வரவு-செலவுத்திட்டத்தில் 250 ரூபா 44 சதமே மேலதிக வருமானமாக மன்னார் பிரதேச சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)



மன்னார் மாவட்டத்தின் மிகவும் பழைமைவாய்ந்த இரண்டாவது பெரிய ஆலயமான நானாட்டான் சிறி செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், நானாட்டான் பிரதேசசபை தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேசம்,முசலி பிரதேச கடற்படை அதிகாரிகள்,முருங்கன் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி,கிராம சேவையாளர்கள் மற்றும் சமயப் பெரியவர்கள்,பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# ‘உதிரத்தால் உயிர் காப்போம்’ வவுனியாவில் இரத்ததான முகாம்



(பனிக்கன்குளம்)

வவுனியா அலகரை நண்பர்களின் ஏற்பாட்டில் "உதிரத்தால் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளிலான குருதிக் கொடை நிகழ்வு நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை சாஸ்திரி கூழாங்குளம் செந்தூரன் மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா வைத்திய சாலையில் நிலவுகின்ற குருதித்தட்டுப்பாட்டின் ஓர் பகுதியை நிவர்த்தி செய்யும் முகமாக வவுனியா இரத்த வங்கியுடன் இணைந்து அலகரை நண்பர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் முன்னாள் வடக்குமாகாண சுகாதார அமைச்சரும் வைத்தியருமான ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன், வவுனியா தெற்கு பிரதேசசபை உறுப்பினர் ப.சத்தியநாதன், வைத்தியர் சுதாகரன் உட்பட குருதிக்கொடையாளர்களும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## முக்கொம்பன் சந்தைக்கு வெளியில் மரக்கறி வியாபாரம்-வியாபாரிகள் விசனம்

(பரந்தன்)

பூநகரி முக்கொம்பன் சந்தைக்கு வெளியில் உள்ள வியாபார நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தைக்கு வெளியில் சில பல்பொருள் வியாபார நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதால்பொது மக்கள் சந்தைக்குள் வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே பூநகரி பிரதேச சபையினர் இது தொடர்பில் உரியநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளையை தொடர்பு கொண்டு வினவிய போது.

குறித்த விடயம் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தைக்கு வெளியில் மரக்கறி விற்பனையில் ஈடுபடுகின்ற இரண்டு வர்த்தகர்களுக்கு அதனை நிறுத்துமாறு அறிவித்தல் விடுத்தபோதும் அவர்கள் இதுவரை அதனை மேற்கொள்ளவில்லை. எனவே உடனடியாக அவர்களுக்கு கடிதம் மூலம் மரக்கறி வியாபாரத்தை நிறுத்துமாறு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். (2-312)

# ஓம் நமசிவாய வாழ்க
# திருப்பெருந்துறை மன்னா வாழ்க
# பொன்னம்பலம் நீடூழி வாழ்க

தில்லைச் சிதம்பரத்துக்கு ஒப்பாக மக்களால் கொண்டாடப்படும் ஈழத்துச் சிதம்பரத்து இறையின் திருவெம்பாவை மஹோற்சவம் இன்று தொடக்கம் நடைபெறும்.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியும் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான இறைவனுக்கு நடைபெறும் திவ்ய மஹோற்சவம் கற்றோரும் மற்றோரும் போற்றும் காரை மண்ணில் நடைபெறும் மஹோற்சவம் போல் இலங்கையில் சிதம்பரத்திற்கு ஒப்பான ஒரு உற்சவம் எங்கும் நிகழ்வதில்லை.

சித்திரத் தேரோட்டமென்ன, ஆருத்திரா அபிஷேகமென்ன, உலகப் பிரசித்தம். இரவிரவாக அதிகாலை வரை நடைபெறும் அபிஷேகத்தில் பல குடம் பால், தயிர், பஞ்சாமிர்தம், நூற்றுக்கணக்கான இளநீர்கள், தேன் போன்றவற்றுடன் சுத்தமான திருநீற்றுடன், செஞ்சந்தனம் இன்றும் பல திரவியங்களுடன் செய்வது.

''ஆடினாய் நறு நெய்யொடுபால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்.... சூடினாயருளாய் சுருங்க எம் தொல்வினையே" சம்பந்தர் வாக்கு கண்கொள்ளாக் காட்சியாகும். சித்திரத் தேரில் திண்ணபுரம் நடராஜர், பிள்ளையார், முருகன், பூரண புட்கலை ஐயனார், அம்பாள், மாணிக்கவாசகர் வீதி வலம் வரும் கோலம் காணக்கிடைக்காத காட்சியாகும். வேத கோசங்கள், வாத்திய கோசங்கள், திருமுறை கோசங்கள், புராணப்படிப்பு ஒலிகள், ஆண்டிகேணி ஐயனார் வாழ்த்துக்குள், திருப்பெருந்துறை மன்னா வாழ்க.



ஓம் நமசிவாய வாழ்க பொன்னம்பலம் நீடூழி வாழ்க, சிவ சிதம்பரம் வாழ்க என இறைவன் புகழ் ஒலிகள் என்ற சூழ்நிலையே ஒரு தெய்வீக நிலைக்கு எம்மையும் பேரருளுக்கு மனம் மகிழ்ச்சியில் செல்லும்.

இறைவன் இருப்பதையே சிலர் மறந்து விடுகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில் தன் இருப்பை நிரூபிப்பதற்காக பல அற்புதங்களை இறைவன் நிகழ்த்துவது வழமை. அந்த அற்புதங்களை க.வைத்தீஸ்வர ஐயாவின் புலமையில் கார்த்திகேயப் புலவரின் திண்ணபுர அந்தாதியிலும் புலவர் மணி சோ.இளமுருகனாரின் ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் நூலில்

''திண்ணமா புரத்தவர் தெய்வக் காதையை
எண்ணுவார் கற்பவர் காதி லேற்பவர்
மண்ணிலே செல்வமும் வாழ்வு மெய்திப்பின்
விண்ணிலே சிவபுர மேவி நிற்பரால்"

சுந்தரேசப் பெருமானைக் கருத்திற் கொண்டு ஆற்றப்பட்ட வகை கூறும் தெய்வீக வரலாற்றை நினைவுகூர்தலாலும் ஓதுதலாலும் காதாற் கேட்டாலும் உய்வு பெற்று உயர் கதி அடைவர். அந்த வகையில் பல அற்புதங்கள் நிறைந்த இடம் இந்தச் சிதம்பரம்.

''கூர்த்தமெய் ஞானத்தால் வழிபடுவோரை
ஈர்த்து அருள்பாலிப்பவர் ஈழத்துச் சிதம்பரத்தான்"

ஆலயச் சூழலில் அமைந்துள்ள பல மடங்களில் புராணப்படிப்புகளும் அடியார்க்கு அமுதூட்டும் பணிகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. இத்தகைய பெருமைக்குரிய ஈழத்துச் சிதம்பரத்தைத் தரிசனம் செய்து முடிவில்லாப் பேரின்பம் பெருவாழ்வில் திளைப்போமாக.

ஓம் நமசிவாய
திருப்பெருந்துறை மன்னா வாழ்க
பொன்னம்பலம் நீடூழி வாழ்க

அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்
க.கு.க.சிவபாலன்.
மாணிக்கவாசகர் மடாலயம்.

# எதிர்காலத் தமிழினத் தலைமைக்கு தகுதி வாய்ந்த அரசியற் கட்சி...?
## கம்பன் கழகத்தின் சொல்விற்பனம் சிறப்பு நிகழ்ச்சி

(கொழும்பு)

அகில இலங்கைக்கம்பன்கழக இளநிலை நிர்வாகிகள் நடத்தும் சொல் விற்பனம் சிறப்பு நிகழ்ச்சி அறங்கூறு அவையமாக எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் ஆர்.பி.ஹரன், தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த தே.செந்தில் வேலவர். சக்தி எப்.எம். பணிப்பாளர் ஆர்.பீ.அபர்ணாசுதன், வசந்தம் தொலைக்காட்சியின் பிரதிப் பொது முகாமையாளர் மு. குலேந்திரன் ஆகிய ஊடகவியலாளர்கள் மங்கல விளக்கினை ஏற்றவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன். டக்ளஸ்தேவானந்தா. மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோரும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான கலாநிதி க.சர்வேஸ்வரன், சி.தவராசா, க.சிவாஜிலிங்கம், மேல்மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடக்கவுரையினை சட்டத்தரணி ஆர். இராஜகுலேந்திரா நிகழ்த்தவுள்ளார்.

"எதிர்காலத்தமிழினத் தலைமைக்கு தகுதி வாய்ந்த அரசியற் கட்சி..." எனும் பொருளில் இடம்பெறவுள்ள இவ் அறங்கூறு அவையத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கம்பன்கழக நிறுவுநர் கம்பவாரிதி இ.ஜெயராஜ், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட முதுநிலை விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன். பேராதனைப் பல்கலைக்கழக அரசியற்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ச. பாஸ்கரன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் அறிவோர் ஆயத்தினராக அமரவுள்ளனர்.

எதிர்காலத் தமிழினத் தலைமைக்கு தகுதி வாய்ந்த அரசியற் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே! என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனும், தமிழ் மக்கள் கூட்டணியே! என தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கைப் பரப்புச்செயலர் க.அருந்தவபாலனும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியே என! யாழ்.மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேலும், ஜனநாயக மக்கள் முன்னணியே! என மேல் மாகாண சபை உறுப்பினர் கே.ரி.குருசாமியும், வாதிடவுள்ளனர். நிறைவில் அறிவோர் அவை தங்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளது.

இவ் விழாவிற்கு அனைவரையும் வருகை தருமாறு கம்பன் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

# சாந்தனின் படைப்புலகம் விசேட கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் சர்வதேசப் புகழ்பெற்ற இலக்கியவாதியும், தமிழ், ஆங்கில மொழிகளில் எழுத்தாளராகத் திகழ்ந்து, யாழ்.மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருபவருமான, முற்போக்குப் படைப்பாளி, எழுத்தாளர் ஐ.சாந்தனின் படைப்புலகம் - அரசியல், சூழல், அழகியல் பற்றிய பிரக்ஞைகள் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி. கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

சட்டத்தரணியும் கவிஞருமான சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கருத்துரைகளை எழுத்தாளர்களான மு. அநாதரட்சகன், சி. கருணாகரன், திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இவ் விசேட கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

# லக்ஷபான காட்டுப் பகுதியில் தீ!



மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவனொளிபாத மலைக்கு சொந்தமான லக்ஷபான தோட்டம் முள்ளுகாமம் மேற்பிரிவு பிரதேச காட்டுப்பகுதியில் தீ பரவியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பரவிய தீ காரணமாக குறித்த காட்டுப்பகுதியில் சுமார் இரண்டரை ஏக்கர் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# கைவிலங்கை அகற்றி விட்டு திடீரென தப்பிச் சென்ற கைதி!

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சந்தேகத்துக்குரிய ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

ரம்ஷி என அழைக்கப்படும் மொஹமட் ராபிக் என்பவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். பொறளை - சீவலி ஒழுங்கையைச் சேர்ந்த அவர் கொள்ளை குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்துக்குரியவர் ஏனைய சந்தேகத்துக்குரியவர்களுடன் கைவிலங்கு இட்டு நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். இதன்போது அவர் கைவிலங்கை அகற்றி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பண்பாட்டு பேரவை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச பண்பாட்டுப் பேரவை பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் ,2.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பேரவை அங்கத்தவர்கள், கலைஞர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்



(கரணவாய்)

காங்கேசன்துறை பிராந்தியத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக சித்தானந்த ஜெயக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி யாக இருந்த இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் காங்கேசன்துறை பிராந்தியத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவினால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (இ-60)

# மார்கழி மாத இராசிபலன்கள்



## 16.12.2018-14.01.2019

மேஷராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். தன சப்தமாதிபதியான சுக்கிரன் உங்கள் இராசியையே பார்க்கின்றார். எனவே பொருளாதார முன்னேற்றம் சிறப்பாகவே இருக்கும். எந்தக் காரியமும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிக்க இயலும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும் அமைப்பும் உண்டு. சுக்கிர பலம் நன்றாக இருப்பதால் தொழில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும்.

அஷ்டமத்தில் குருவோடு புதன் இணைந்திருக்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. இந்த ஆதிபத்யங்களைப் பெற்ற புதன், குரு ஆகிய இரண்டு கிரகங்களும் ஒன்று சேர்ந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜ யோகம் உருவாகும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறத்தொடங்கும். அதுமட்டுமல்லாமல் பலமுறை முயற்சி செய்தும் பலன்தராத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். 9ஆம் இடத்தில் சூரியன், சனி ஆகிய இரண்டும் இணைந்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. 'பிதுர்ரார்ஜித ஸ்தானம்' என்று சொல்லப்படும் இடத்தில் பகை கிரகங்களின் சேர்க்கை இருப்பதால் பெற்றோர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே கிடைக்கும். நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்தால் கூட அது திருப்தியளிக்காது.

அண்ணன், தம்பிகளுக்குள் அரவணைப்புக் குறையலாம். ஒரு சகோதரர் உங்கள் கருத்துக்கு ஒத்துவரும் பட்சத்தில், மற்றொரு சகோதரர் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். வாகனம் வைத்திருப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் செல்வது நல்லது. குறிப்பாக இம் மாதம் மார்கழி மாதம் என்பதால் திருப்பாவை, திருவெம்பாவை பாடி தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதோடு நடராஜர் தரிசனமும் கண்டு வழிபட்டால் நலமும், வளமும் உங்களுக்கு கிடைக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் டிசெம்பர் 17ஆம் திகதி விரய ஸ்தானத்திற்கு செல்கின்றார். எனவே இக்காலத்தில் சுபவிரயம் செய்வது நல்லது. வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். மருத்துவச் செலவுகள் கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும்.




## குடும்பத்தில் மகிழ்ச்சி!

**தனுசு புதனின் சஞ்சாரம்**


இதுவரை விருச்சிகத்தில் இருந்த புதன், டிசெம்பர் 29ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இதன் விளைவாக உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள்மாறும். உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். "எலிவளை ஆனாலும் தனி வளை" வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப இது வரை கூட்டுக்குடும்பத்தில் இருந்தவர்களாக இருந்தால் இனி தனியாக வீடு வாங்கிக் குடியேறும் யோகம் ஏற்படும். உங்கள் ஜாதக அடிப்படையில் யார் பெயரில் வீடு வாங்கினால் யோகம், எந்த திசையில் வாசல் இருந்தால் அதிர்ஷ்டம் என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிந்து வாங்குவது நல்லது.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு தனாதிபதியாகவும், சப்தமாதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். பற்றாக் குறை பட்ஜெட் அகலவும், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும், மண மாலை சூடும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கவும் காரணகர்த்தாவாக இருப்பவர் சுக்கிரன்.

அவர் இப்பொழுது ஜனவரி முதலாம்திகதி விருச்சிகத்திற்கு அடியெடுத்து வைக்கின்றார். அங்குள்ள குருவோடு அவர் இணையும் பொழுது அசுர குரு, தேவ குருவின் சந்திப்பு நிகழ்கின்றது. எனவே மனைதேடி மங்கலச் செய்திகள் வந்து சேரும். இனத்தார்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். படித்து முடித்து பட்டதாரியாக இருந்து வேலை கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது கை நிறையச் சம்பளம் வாங்கும் வேலை ஒன்று அமையும். பணியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் இப்பொழுது மேலிடத்து ஆதரவோடு மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும்.

இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை சூரியனையும், சனிக்கிழமை



சனி பகவானையும் தொடர்ந்து வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் மகிழ்ச்சி அதிகரிக்கும் மாதமாகும். மற்றவர்களின் பாராட்டு மழையில் நனைவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெற்றோர்களின் பிரியம் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உடன் பிறப்புக்கள் எதிர் பார்த்த உதவிகளைச் செய்வர். சுக்கிர பலம்நன்றாக இருப்பதால் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணிபுரியும்பெண்களுக்கு மேலிடத்து ஆதரவும், சலுகையும் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். சிவன் வழிபாடும், அனுமன் வழிபாடும் செயற்பாடுகளில் வெற்றியைக் கொடுக்கும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



ரிஷப ராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது 6ஆம் இடத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் வீற்றிருக்கும் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியின் மீது பதிகின்றது. எனவே இம்மாதம் வீட்டைநோக்கி சுபச் செய்திகள் வந்து கொண்டே இருக்கும். சச்சரவுகள் விலகிச் சமாதானம் கொடிகட்டிப் பறக்கும். அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும் குருவின் பார்வை பலத்தால் தனபஞ்சமாதிபதியின் பார்வை பலத்தாலும் பொருளாதார நெருக்கடி அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர்.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். கல்யாண வாய்ப்புகளுக்காகக் காத்திருப்பவர்களுக்கு கல்யாணம் கைகூடும். தொழிலில் இருந்த தொய்வு அகலும். நீங்கள் உழைப்புக்கென்றே பிறந்தவர்கள் என்பதால் உத்தியோகத்தில் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்தாலும் மீண்டும் உங்களுக்கு வேலை வாய்ப்பு வந்து கொண்டே இருக்கும்.

அஷ்டமத்தில் சனி மட்டுமல்லாமல் சூரியனுமல்லவா இணைந்து சஞ்சரிக்கின்றார். சுகாதிபதியாக சூரியன் இருப்பதால் சுகக்கேடுகள் உங்களுக்கு அதிகரிக்கலாம். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் ஏற்படும். ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் ஜீரணத் தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும். பெரிய அளவிற்கு வைத்தியச் செலவுகள் ஏற்படாது. என்றாலும் கூட சிறுசிறு பாதிப்புகள் தோன்றி மறையும். அலைச்சலையும் குறைத்துக் கொள்ளுங்கள். அத்தியாவசியத் தேவைகளை முன்னிட்டு அலைச்சல்கள் ஏற்பட்டால் அதை மேற்கொள்வதில் தவறில்லை. வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம். இட மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகளும் அஷ்டமத்துச் சனியின் காலத்தில் வருவது இயற்கைதான். வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

இம்மாதம் ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப் பெருமானை வழிபடுவது நல்லது. மேலும் அஷ்டமத்துச் சனி நடைபெறுவதால் கெடுபலன்கள் குறையவும், நற்பலன்கள் மேலோங்கவும் சனிக்கிழமை அன்று அனுமனையும், சனி பகவானையும் வழிபட்டு வாருங்கள்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7, 12-க்கு அதிபதியானவர் செவ்வாய். களத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய், மாதத் தொடக்கத்தில் 10ஆம் இடத்தில் சஞ்சரித்து தொழில் தொடர்பான சிந்தனைகளை வெற்றிபெறச் செய்வார். டிசெம்பர் 17ஆம் திகதி மீனஇராசிக்கு செல்கின்றார். விரயாதிபதி இலாப ஸ்தானத்திற்குச் செல்லும் பொழுது விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். ஒருசிலருக்கு திடீர் தொழில் மாற்றங்கள் ஏற்படலாம். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து எங்களுக்கு தொழில் நுணுக்கங்கள் நன்றாகத் தெரியும் உங்களோடு நாங்கள் இணைந்து, புதிதாகத் தொடங்கும் தொழிலில் இலாபத்தை வரவழைத்துக் கொடுக்கின்றோம்" என்பர். அவர்கள் ஜாதகத்தில் தொழில் ஸ்தானம் நன்றாக இருக்கின்றதா என்று பார்த்து அவர்களை பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்வது நல்லது.

**தனுசு இராசியில் புதனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 29 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம்




## உறவுகள் பலப்படும்!

கிடைக்கும்என்பது பழமொழி. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். அதே நேரத்தில் பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் உருவாகலாம். பிரச்சினைகளும் அதிகரிக்கலாம். மக்கள் செல்வங்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. சூரியன் மற்றும் சனியோடு புதன் இணைவதால் தொழில் ரீதியாக வாங்கிய கடனை அடைக்கப் புதிய கடனை வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். வாகன யோகம் உண்டு. புத ஆதித்ய யோகம் இருப்பதால் பழைய வாகனங்களை கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்கும் அமைப்பும், பூர்வீகச் சொத்துகளை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் யோகமும் உருவாகும் நேரமிது.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் நடைபெறும். அந்த நிகழ்வு ஜனவரி முதலாம் திகதி நிகழவிருக்கின்றது. விருச்சிக இராசிக்கு வரும் சுக்கிரன் உங்கள் இராசியைப் பார்ப்பதால் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். சுபகாரியப் பேச்சுகள் முடிவடையும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினை அகலும். ஒற்றுமை பலப்படும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய மாதமாகும். அதிக விரயம் ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நேரமிது. வீடு மாற்றம், அசையாச் சொத்துக்கள் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான சூழ்நிலை ஏற்படும். உயர் அதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு பாராட்டுவர். புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். தாய்வழி ஆதரவு ஓரளவே திருப்தி தரும். சகோதர வர்க்கத்தினர் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். காலாகாலத்தில் அவர்களுக்கு நடைபெற வேண்டிய கல்யாணம் பற்றிச் சிந்திப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல முடிவெடுக்கும் வாய்ப்பும் உருவாகும். பிரதோச வழிபாடு பெருமை சேர்க்கும்.

(தொடரும்...)




# தமிழகம், புதுவையில் 40 தொகுதிகளையும் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றும்

## -இளங்கோவன் நம்பிக்கை-



(டில்லி)

எதிர்வரும் நாடாளு மன்ற தேர்தலில் தமிழகம், புதுவையில் 40 தொகுதிகளையும் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றும் என தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மதுரையில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர், மத்தியில் ஆளும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு அ.தி.மு.க. அரசை காப்பாற்றும் என்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால் இன்றைய சூழ்நிலையில் பாரதிய ஜனதா கட்சி தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத கட்சியாக காணப்படுகிறது. 5 மாநில சட்ட சபை தேர்தல் முடிவுகள் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் எதிரொலிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 5 மாநில தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு வெற்றிகரமான தோல்வி என்று தமிழிசை கூறி வருகிறார். அவர் விரக்தியில் இப்படி கூறியுள்ளார். ஆனால் பாரதிய ஜனதா கட்சி அழிந்து வருகிறது. இது தமிழிசைக்கு நன்றாக தெரியும். எனவே தமிழிசை பாரதிய ஜனதாவிலிருந்து விலகி வேறு கட்சியில் சேர்ந்தால் தான் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி மிகவும் வலிமையாக உள்ளது. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம், புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (4-7)

# துருக்கியில் ரயில்...

# 7 பேர் பலி, 40பே...



(அங்காரா)

துருக்கியில் நேற்று அதிவேக புகையிரதம், நடைமேம்பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர். 40பேர் படுகாயமடைந்தனர்.

துருக்கி தலைநகர் அங்காராவில் இருந்து மத்திய துருக்கியின் கென்யா ... அதிவேக பு... பட்டு சென்ற... சாண்டிஸ் ர... சென்றபோது... பாலத்தின் ... இரும்பினா... மேம்பாலம் ... பெட்டிகள் சி... அத்துடன் ... ண்டன.

விபத்து ... மீட்புக் குழு... மீட்புப்பணி... பெட்டிகளி... உயிருக்குப்... றப்பட்டு ... அனுப்பி ...

# சீனாவுடனான வணிக உடன்பாட்டுக்கு உதவி செய்தால் ஹுவாவி தலைமை நிதி அதிகாரி விடயத்தில் தலையிடுவேன்

## அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்து



(வோஷிங்டன்)

சீனாவுடனான வணிக உடன்பாட்டுக்கு உதவியாக இருக்குமானால் ஹுவாவி தலைமை நிதி அதிகாரி விவகாரத்தில் தான் தலையிடப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அறிவுறுத்தலை அடுத்துச் சீனாவின் ஹுவாவி நிறுவனத் தலைமை நிதி அதிகாரி மெங் வான்சூ கனடாவில் டிசெம்பர் முதலாம் திகதி கைது செய்யப்பட்டார். இதன் பின்னர் இடம்பெற்ற 3 நாள் விசாரணைகளின் பின்னர் வான்கூவர் நீதிமன்றம் கடுமையான நிபந்தனைகளுடன் அவரைப் பிணையில் விடுவித்துள்ளது.

மெங் வான்சூவை விசாரணைக்காக அமெரிக்காவுக்குக் கொண்டுவரக் கனடா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய அந்நாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நடவடிக்கையால் அமெரிக்கா - சீனா இடையிலான வணிக உறவுகள் மேலும் பாதிக்கப்படும் எனக் கருதப்படுகிறது.

இந்நிலையில் வோஷிங்டனில் ரொய்ட்டர்ஸ் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி ட்ரம்ப், சீனாவுடனான வணிக உடன்பாட்டுக்கு உதவுமானால், ஹுவாவி தலைமை நிதி அதிகாரி மெங்வான்சூ விவகாரத்தில் அமெரிக்க நீதித் துறையில் தான் தலையிடப்போவதாகத் தெரிவித்தார். (4-7)

# ஹுவாவி தலைமை நி... கைது விடயத்தில் தவறிழை...

## சீனா கவலை



(பீஜிங்)

ஹுவாவி தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தலைமை நிதி நிர்வாகியின் கைது விடயத்தில் ஆரம்பத்திலேயே தவறிழைக்கப்பட்டுள்ளதென சீனா குறிப்பிட்டுள்ளது.

சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் லூ காங், நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களுக்கு மத்தியில் உரை யாற்றிய போதே இதனைத் தெரிவித் துள்ளார்.

தமது நிலைப்பாட்டை கனடா மற்றும் அமெரிக்காவிற்கு ஆரம்பத்திலேயே தெளிவாக எடுத்துரைத்ததாக குறிப்பிட்ட லூ காங், குறித்த தவறை திருத்திக்கொள்ளும் வகையில் அவரை உடன் நிரந்தரமாக விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய தொலை தொடர்பு நிறுவனங்களில் ஒன்றான சீனாவின் ... தொடர்பு நி... நிதி நிர்வா... முதலாம் ... செய்யப்பட்... தனைகளு... விக்கப்பட்...

அமெரி... ஒன்றியத்... ஈரானுக்கு ... விகளை ... கவே அவ... ளார். சீனா... சென்று ...

# என்னைக் கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டம்

## அமெரிக்கா மீது வெனிசுவெலா ஜனாதிபதி குற்றச்சாட்டு



(கராகஸ்)

கொலை சதியின் மூலம் வெனிசுவேலாவில் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா முயற்சிப்பதாக, வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோ குற்றம் சாட்டியுள்ளார்.

தன்னை கொலை செய்து, ஆட்சியை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாக வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோ அமெரிக்கா, மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த சதித்திட்டத்தில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் நேரடியாக தொடர்புபட்டிருப்பதாக மதுரோ தெரிவித்த போதிலும், அதற்கான எவ்வித ஆதாரங்களையும் அவர் முன்வைக்கவில்லை.

வெனிசுவேலாவின் கராகஸ் நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "என்னை கொலை செய்து வெனிசுவேலாவின் ஜனநாயகத்தை அழிக்க அமெரிக்கா முன்வைத்துள்ள திட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர்ஜோன்போல்டன்வெள்ளை மாளிகையில் மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்திப்புகளின் போதும் வெனிசுவேலா தனது எண்ணெய் சந்தையை மீட்டெடுக்க முடியாது என்றும் அது மதுரோவின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பது குறித்தே பேசி வருகிறார்" எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், வெனிசுவேலா ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி எனக் குறிப்பிட்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவர் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

# ஐ.நா.சபைத் தீர்மானங்களை ஈரான் மீறி செயற்பட்டுள்ளது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

ஏவுகணை திட்டத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை மீறி ஈரான் செயற்பட்டுள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை கலந்து கொண்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ அதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இக்குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

அத்தோடு, இச்செயற்பாடுகளுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார். குறிப்பாக ஏவுகணை திட்டம் தொடர்பில் ஈரான் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் மீள கட்டுப்பாடுகளை விதிப்பது அவசியமென அவர் கூறியுள்ளார்.

ஈரான் அணு ஒப்பந்தத்தை பொறுத்தவரையில், அதன் நடைமுறைகளை ஈரான் பின்பற்றவில்லையென்றும், அதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்கள், மத்திய கிழக்கினூடாக பயணிக்கும் அமெரிக்கர்கள், ஈரானின் ஏவுகணையால் தற்போது அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஐரோப்பியர்கள் என சகலருக்கும் கெடுபிடியான நிலை ஏற்பட்டுள்ளதென மைக் போம்பியோ சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆகவே, இந்நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கடமையென அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# கா... ஒரு...



(டமா...

வடக்... நகரில் ... தாக்குத... துள்ளத...

# வெளிநாடு

## ...யில் விபத்து; ...பேர் படுகாயம்


கென்யா நோக்கி நேற்று காலை அதிவேக புகையிரதம் ஒன்று புறப்பட்டு சென்றுக் கொண்டிருந்தது. மர்சாண்டிஸ் ரயில் நிலையத்தை கடந்து சென்றபோது, திடீரென நடை மேம்பாலத்தின் மீது மோதியது. இதனால் இரும்பினால் அமைக்கப்பட்ட அந்த மேம்பாலம் உடைந்தது. அதில் ரயில் பெட்டிகள் சிக்கி உருக்குலைந்தன. அத்துடன் 2 பெட்டிகள் தடம்புரண்டன.

விபத்து குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். ரயில் பெட்டிகளில் இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப்போராடியவர்கள் வெளியேற்றப்பட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த விபத்தில் 7 பேர் பலியாகியிருப்பதாகவும், 40 பேர் படுகாயம் அடைந்து உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

புகையிரத நிலையத்தை கடந்தபோது உள்ளூர் புகையிரதம் மீது அதிவேக புகையிரதம் மோதியதையடுத்து, தடம்புரண்டு பாலத்தின் மீது மோதியதாக தெரியவந்துள்ளது. (4-7)

## கிறிஸ்மஸ் சந்தையில் துப்பாக்கிச்சூடு 3 பேர் உயிரிழப்பு; 12பேர் படுகாயம்






(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் கிறிஸ்மஸ் சந்தையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் பலியாகினர். தாக்குதல் நடத்தியவரை துப்பாக்கியால் சுட்டுப்பிடிக்க படை வீரர்கள் முயற்சித்தபோது அவர் தப்பினார்.

பிரான்ஸ் நாட்டில் அண்மைக் காலமாக பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அங்குள்ள ஸ்டிராஸ்பர்க் நகர கிறிஸ்துமஸ் சந்தையில் நேற்று முன்தினம் மாலையில் மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொண்டிருந்தனர்.

இரவு 8 மணி அளவில் அங்கு துப்பாக்கியுடன் வந்த ஒரு மர்ம நபர், மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுடத் தொடங்கினார். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. அங்கிருந்த மக்கள் நாலாபுறமும் பதறியடித்தவாறு ஓட்டம் எடுத்தனர்.

இருப்பினும் துப்பாக்கிச் சூட்டில் குண்டு பாய்ந்து 3 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக அங்கிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பற்றிய தகவல் அறிந்ததும், அந்தப் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த படை வீரர்கள் அங்கு விரைந்தனர். துப்பாக்கிச்சூட்டை தடுத்து நிறுத்த அவர்கள் முயற்சித்தனர். ஆனால் துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், அவர்கள் சொல் கேட்டு துப்பாக்கிச்சூட்டை நிறுத்துவதாக இல்லை.

ஒரு கட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச்சூடு நடந்தது. அதில் அவர் காயம் அடைந்தாலும், சம்பவ இடத்தில் இருந்து தப்பி ஓடி விட்டார். அவரை சுட்டும், பிடிக்க முடியாமல் போனது படை வீரர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

துப்பாக்கிச்சூடு பற்றி பொலிஸார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்துமஸ் சந்தைகள் அனைத்தும் 'சீல்' வைக்கப்பட்டன். பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தினர். பல உணவு விடுதிகளிலும், கதவுகளை இழுத்து மூடினர். அங்கிருந்த மக்கள் அங்கேயே அடைக்கலம் தேடினர்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தையடுத்து, அந்த நகரில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றம் மூடப்பட்டது. தாக்குதலில் பலியானவர்களுக்கு சபாநாயகர் ஆன்டனியோ தஜானி இரங்கல் தெரிவித்தார்.

அந்த நாட்டின் ஜனாதிபதி மக்ரான் அமைச்சரவை அதிகாரிகளைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்ட மக்ரான், நடந்த சம்பவத்துக்கு தனது கண்டனத்தை பதிவு செய் தார். நாட்டு மக்களுடன் இணைந்து நிற்பதாக அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்திய நபரை தேடிப்பிடித்து கைது செய்வதற்காக அந்த நகரில் பல பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். 2 ஹெலிகொப்டர்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (4-7)

## ...மை நிதி அதிகாரியின் ...வறிழைக்கப்பட்டுள்ளது

சீனாவின் ஹுவாவி தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தலைமை நிதி நிர்வாகி மெங் வான்சூ, கடந்த முதலாம் திகதி கனடாவில் கைது செய்யப்பட்டு, நேற்று கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் தடைகளை மீறி ஈரானுக்கு தொலைத்தொடர்பு கருவிகளை வழங்கிய குற்றத்திற்காகவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சீனாவிலிருந்து மெக்சிக்கோ சென்று கொண்டிருந்த அவர், அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் கனடாவின் வான்கூவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டாலும், அமெரிக்காவிற்கு நாடுகடத்தப்படும்நிலையை மெங் எதிர்நோக்கியுள்ளார். இந்நிலையில், அவரை விடுவித்து சீனாவிற்கு திருப்பியனுப்ப வேண்டுமென சீன அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. (4-7)

## கார்க்குண்டுத் தாக்குதல்! ஒருவர் பலி; 21 பேர் படுகாயம்





(டமாஸ்கஸ்)

வடக்கு சிரியாவில் அசாஸ் நகரில் இடம்பெற்ற கார்க்குண்டு தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளதாக வைட் ஹெல்மெட்ஸ் சிவில் பாதுகாப்பு நிறுவனத்தை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த வெடிப்பு சம்பவமானது அங்கு உள்ள ஒரு உள்ளூர் வைத்தியசாலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் White Helmets சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் மற்றும் துருக்கிய மனிதாபிமான நிவாரண அறக்கட்டளை பணியாளர்கள் பாதிக்கப்பட்ட இடத்திற்கு சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இந்த குண்டு தாக்குதலால் ஆரம்ப பாடசாலை உட்பட பல கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த தாக்குதலுக்கு தற்போது வரை எந்த ஒரு குழுவும் பொறுப்பேற்கவில்லை. அத்தோடு காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## தேவாலயத்தின் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர்

### ஆரம்பகட்ட விசாரணையில் தகவல்

(பிரேசிலியா)

பிரேஸிலில் உள்ள தேவாலயத்தில் திடீரென துப்பாக்கிச்சூட்டை நடத்திய நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கேம்பினாஸ் நகரில் உள்ள தேவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வழிபாடு இடம்பெற்றுக் கொண்டிருந்த வெளியிலேயே குறித்த நபர் தான் மறைத்து வைத்திருந்த இரு துப்பாக்கிகளை எடுத்து சரமாரியாக சுட்டதில் 4 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 4 பேர் காயமடைந்திருந்தனர்.

தகவல் அறிந்து அங்கு விரைந்த பொலிஸார் அவனை சுற்றிவளைத்த போது குறித்த நபர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு உயிரிழந்தார்.

இதன் பின்னர் இடம் பெற்ற விசாரணையில் அவர் 49 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

## ஏமன்-ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம்

(சனா)

ஏமன் அரசுக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்குமிடையே சுவீடனில் ஒருவாரமாக ஐக்கிய நாடுகள் சபை தலைமையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருதரப்பினரிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பிடியிலுள்ள சனா விமான நிலையத்தை மறுபடியும் திறப்பதற்கு ஏமன் அரசு கடந்த வாரம் சம்மதம் தெரிவித்திருந்தது.

ஆனால் அங்கு வரும் விமானங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னரே சனா விமான நிலையத்துக்குள் அனுமதிக்கப்படும் என்ற ஏமன் அரசின் முன்மொழிவு கடந்த வாரம் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் நிராகரிக்கப்பட்டது.

தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏமன் அரசின் இந்த முன்மொழிவுக்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பொலிஸார்-பொதுமக்களிடையே கட்டுவான பகுதியில் திடீர் மோதல்

## முதியவர் பலி! நான்கு பொலிஸார் காயம்

(கட்டுவான)

அம்பாந்தோட்டை, கட்டுவான பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே இடம்பெற்ற திடீர் மோதலில் முதியவர் ஒருவர் உயிரிழந்ததுடன், நான்கு பொலிஸார் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.





கட்டுவான பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யும் இடமொன்றை சுற்றிவளைக்க முற்படுகையிலேயே பொலிஸாரால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



பொலிஸார்மேற்கொண்ட இந்த தாக்குதலில் 60 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்தையடுத்தே பதற்ற நிலை அப் பகுதியில் தோன்றியுள்ளது.

குறித்த நபர் உயிரிழந்ததையடுத்து கோபமடைந்த அப் பகுதி மக்கள் பொலிஸார் மீது கற்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். மேலும் ரயர்களை எரித்தும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இதனால் நான்கு பொலி ஸார் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து அப் பகுதிக்கு பாதுகாப்பு நடவடிக்கைக்காக விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை தாக்குதலை மேற்கொண்டு மக்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. (இ-7)



# துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் பலி!

(சப்புகஸ்கந்த)

சப்புகஸ்கந்த பகுதியில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் சப்புகஸ்கந்த கல்வெல வீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 35 வயது வர்த்தகர் ஒருவரே கொல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் சப்புகஸ்கந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 3 ஆவது முறையாகவும் சிறப்பு விருதை வென்ற அரச மரக்கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இலங்கை தேசிய வர்த்தக சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட 2018 தேசிய வர்த்தக நடவடிக்கைகளுக்கான விருது விழாவில் அரச உற்பத்தி துறைக்காக வழங்கப்படும் தங்க விருதை இம்முறையும் அரச மரக் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டுள்ளது.



அத்துடன், அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில்அந்த விருதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

மூன்றாவது முறையாகவும் அரச மரக்கூட்டுத்தாபனம் இவ்விருதை பெற்றுள்ளதுடன், கூட்டுத்தாபனத்தின் பணிகள் தொடர்பில் ஜனாதிபதி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாந்த பண்டாரவால் இவ் விருது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், பதில் பணிப்பாளர் எம்.வை.டி.பவர குமார உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தோலின் தன்மை

ஒரு பையன் எனக்கு ரொம்பவும் வேண்டியவன். என் கூட படிச்சுக் கொண்டிருந்தான். நாங்கள் இரண்டு பேரும் "ஹொஸ்ட"லிலே ஒரே ரூம். தினமும் காலையிலே அவன் தான் முன்னாடி எழுந்திருப்பான். எழுந்தவுடனே என்னிடம் கூட ஒன்றும் பேச மாட்டான். ரொம்ப தீவிரமாக யோசிக்க ஆரம்பிப்பான். என்னடா யோசிக்கிறாய் என்று நான் கேட்பேன். அவன் ரொம்ப நிதானமாக பதில் சொல்வான். "இன்றைக்கு குளிக்கலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கேன்!" என்பான்! இப்படி அவன் யோசித்த நாள் தான் அதிகம். குளித்த நாள் குறைவு.

அவன் கூட ஒரு தடவை குற்றாலத்துக்குப் போயிருந்தேன். அங்கேயும் அவன் இதே மாதிரித்தான் யோசிக்க ஆரம்பித்தான். அவனை மெதுவாகத் தள்ளிக்கொண்டு போய் அருவியிலே நிற்க வைக்கிறதுக்குள்ளே போதும் போதும் என்று ஆகிவிட்டது. அப்பவும் எண்ணெய் தேய்ச்சுக்க மாட்டேன் என்றான். சும்மா தான் குளித்தான்.

குற்றாலத்திலே இப்ப நல்ல சீசன் என்று பேப்பரிலே பார்த்ததும் எனக்கு அவன் ஞாபகம் வந்தது. குற்றாலத்திலே எண்ணெய் தேய்ச்சுக்காமல் அருவியிலே நிக்கிறது அபூர்வம்.

சிலபேர் சொல்லுவார்கள் எண்ணெய் தேய்ச்சுக்கொள்வதால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. நம்ம தோல் எண்ணெயை உறிஞ்சுறதில்லை என்பார்கள். அது சரியில்லை.

அண்மைக் காலத்திலே ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்திட்டு தோலுக்கு உறிஞ்சுற சக்தி உண்டு என்று சொல்லிப்போட்டார்கள்.

தோல் மூலமா வைத்தியம் செய்து சில நோய்களைத் தீர்க்கலாம் என்று நம்ம முன்னோர்கள் முன்பிருந்தே அதைச் செய்துகொண்டு தான் வருகிறார்கள். வாதநோய்க்கு சிகிச்சை என்ன? சில தைலத்தை தயார் செய்து தோலிலே சூடு பறக்க தேய்க்கிறது, ஒத்தடம் கொடுக்கிறது, வேது பிடிக்கிறது. இது மாதிரியான புற சிகிச்சைகள் ஏற்கனவே சித்த வைத்தியத்திலே உண்டு.

ஆனால் இந்தக் காலத்து பாட புத்தகத்திலே தோல் ஒரு நம்பகமான கவசம். அது மூலமா எதுவும் உள்ளே போக முடியாது என்று தான் நாம் படித்தோம். இப்ப அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. பியாட்டர் ஸ்லைன்கோ (pyctr slynko) என்று ஒரு ரஷ்ய நிபுணர். மனிதன் உடம்பையும் மிருக உடம்பையும் மூடியிருக்கிற தோலையெல்லாம் அவர் ஆராய்ந்தார். அதோடு உட்புகும் திறனை (Permeability) ஆராய்ச்சி செய்தார். என்ன கண்டுபிடித்தார் தெரியுமா?

குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலே தோல் வழியாக பொருட்கள் உள்ளே போக முடியுமாம். சில சந்தர்ப்பங்களில் தோல் அதை சுத்தியிருக்கிற காற்று அல்லது திரவங்களிலேயிருந்து சில கரைசல்களையும் (கரைசல்கள்–பால்மங்கள் –தொங்கல் கரைசல்கள் (Suspensions) விரும்பி உறிஞ்சி உள்ளே இழுத்துக்குதாம். இப்ப உதாரணதுக்கு, அதிகமாக வியர்க்கிற சமயத்திலே தோலிலே உள்ள துளைகள் பெரிதாகி விடுகிறது. வியர்க்கிறது நின்ற உடனே அதெல்லாம் சுருங்கி பழைய நிலைமைக்கு வருகிறதுக்கு கொஞ்சநேரம் ஆகும். அந்த சமயத்திலே தோல் மேலே நுண்ணிய துகள்–கரைசல் இப்படி ஏதாவது இருந்தா வியர்வை நாளங்கள் அதையெல்லாம் தீவிரமாக உறிஞ்சி உள்ளே இழுத்துக்குமாம்.

ஒருத்தர் வெயிலிலே நடந்திட்டு வந்து வியர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள்ளே நுழையுறார். ஈரத்துணியாலே உடம்பை துடைக்கிறார். அப்ப என்ன ஆகும் தெரியுமா?

துணியிலே இருக்கிற ஈரத்தோடு அதிலே உள்ள அழுக்கு –கிருமி– எல்லாம் சேர்ந்து தோலுக்குள் போய்விடும்.

தோலுக்கு இருக்கிற இந்த தன்மையை மருத்துவ சிகிச்சை முறைகளிலே பயன்படுத்தலாம்.

நீராவிக்குளியல் செய்து கொண்டு வருகிற ஒரு சிறிய அறைக்குள்ளே உட்கார வைத்து அதுக்குள்ளே மருந்து ஆவியை பரப்பினால் அது தோலுக்குள்ளே புகுந்து உடம்பிலே பரவும்.


பால் சீரம் (Milk Serum) உடம்புக்கு ரொம்பும் நல்லது. பாலிலேயிருந்து கொழுப்பு முழுவதையும் எடுத்திட்டால் வே (Whey) என்கிற திரவம் மிஞ்சும். அதுதான் பால் சீரம். உடம்பை வியர்க்க வைத்து அதுக்கப்புறம் இந்த பால்சீரக் கரைசலை உடம்பு முழுவதும் பூசினா அதுவே இருக்கிற சத்தெல்லாம் உள்ளே போய்விடும்.

மருந்துவப் பயனுள்ள களிமண்ணை உடம்பிலே பூசுற ஒரு சிகிச்சை முறை (Balneomud Therapy) மேல் நாடுகளிலே உண்டு. இங்கேயும் இயற்கை வைத்தியத்திலே களிமண் குளியல் உண்டு. ஆனா களிமண்ணாலே மூடப்பட்ட தோல் வியர்த்தாத்தான் மண்ணிலே இருக்கிற மருந்துச்சத்துக்கள் உடம்புக்குள்ளே பரவமுடியும். இதற்கு என்ன செய்யலாம்?

நோயாளியை நல்லா குளிப்பாட்டிவிட்டு அதுக்கப்புறம் அவரை ஒரு சூடான அறையிலே உட்கார வைத்து தாராளமா வியர்க்கிற மாதிரி செய்யலாம். அதுக்கப்புறம் உடம்பை துடைச்சுக்கொண்டு நீர்த்த களிமண் கரைசலை உடம்பிலே பூசிவிடலாம். இப்படி செய்தா மண்ணிலே இருக்கிற சத்து உடம்புக்குள்ளே போறது உறுதியாம். ஒரு வேடிக்கை பாத்தீங்களா?

மனுஷன் தான் கடைசியிலே மண்ணுக்குள்ளே போறான் என்றால் அதுக்கு முன்னாடி –மண்ணே மனுஷனுக்குள்ளே போயிடும் போல இருக்கு! எனக்கு தெரிஞ்ச ஒரு சின்ன ஆலோசனை கோபப்படாமல் கேட்பீர்கள் என்றால் சொல்றேன். இனிமே எங்கேயாவது எருமைமாடு சேத்திலே கிடந்தா அதை பார்த்திட்டு நீங்க ஒதுங்கிப் போகாதீர்கள். உடனே நீங்களும் அதிலே இறங்கி குளிக்க ஆரம்பிச்சிடுங்க!

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்



09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

பின்னர் அவர் ஒரு கத்தோலிக்கராக மாறி பீட்டர் என்ற பெயரில் தைரியமாக தூக்கு மேடையில் ஏறி மரணித்தார். இந்தக் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட புத்த ரகித தேரர் சிறையில் வைக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டில் சிறைக் கைதியாக இருந்த போது அங்கு மரணமானார்.

### பண்டாரநாயக்கவின் மறைவையடுத்து டபிள்யூ.தஹநாயக்க பிரதமராக பதவியேற்றல்

பண்டாரநாயக்கவின் கொலை இலங்கை அரசியலில் அன்று ஸ்திரமற்ற நிலையை உருவாக் கியிருந்தது. பண்டாரநாயக் கவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த விஜயானந்த தஹநாயக்க, பண்டாரநாயக்கவின் கொலைக்குப் பின் பிரதமரானார். காலியின் மக்களாதரவுமிக்க அரசியல்வாதியாக இருந்த தஹநாயக்க ஒரு சுயேட்சை அரசியல்வாதியாகவே இருந்தார்.

பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி (மஹஜன எக்ஸத் பெரமுன) என்று கூட்டணி அமைந்தபோது, அதன் அங்கமாகி, பண்டாரநாயக்கவின் அமைச்சரவையிலும் இடம்பெற்றார்.

அன்று பண்டாரநாயக்கவுக்கு அடுத்ததாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலம் பொருந்திய தலைவராக இருந்தவர் சி.பி.டி.சில்வா ஆவார்.

பண்டாரநாயக்க கொல்லப்பட்டபோது, சி.பி.டி. சில்வா தனது உடல் நலக் குறைவு காரணமாக சிகிச்சைக்காக வெளிநாட்டிலிருந்தார். அன்று நாடாளுமன்ற அவைத் தலைவராக இருந்த சி.பி.டி சில்வா தான் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர் இல்லாத சூழலில் சுயாதீனச் சிந்தனையாளரான டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கவுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி நாட்டின் ஐந்தாவது பிரதமராக தஹநாயக்க பதவியேற்றார்.

ஆனால், அதனை நீண்ட காலம் தக்கவைத்துக்கொள்ள அவரால் முடியவில்லை. அவரது அமைச்சரவையில் 15பேர் அமைச்சர்களாக இருந்தனர்.

பிரதமர் தஹநாயக்க தனக்கு எதிராகவும், தனது அரசாங்கத்துக் கெதிராகவும் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்து. அந்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டாலும் தொடர்ந்து நாடாளுமன்றின் ஆயுட்காலம் முடிவடையும் வரை (1961 வரை) ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாத சூழலில், நாடாளுமன்றைக் கலைக்குமாறு ஆளுநரிடம் பிரதமர் தஹநாயக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 1960 ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி இடம்பெறுமென அறிவிக்கப்பட்டது.

### பிரதமர் தஹநாயக்கவின் அரசியலும் அலரிமாளிகையும்

இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் மூத்த தலைமுறையினருக்கு தஹநாயக்கவை நன்கு தெரியும். சமகாலத்தின் இளம் தலைமுறையினர் இவரை அறிந்திருக்கமாட்டார்கள். அண்மையில் இவரைப் பற்றி மிகவும் சுவாரஸ்யமாக முருகபதி, தேனீ இணையத் தளத்தில் எழுதியிருந்தார்.

அவரின் தகவல்களும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. தஹநாயக்கவின் இயற் பெயர் டொன் விஜயானந்த தஹநாயக்க. காலி ரிச்மண்ட் கல்லூரியிலும் கல்கிஸை புனித தோமஸ் கல்லூரியிலும் பயின்றுள்ள தஹநாயக்காஆசிரியராக பணியாற்றியவர். மாணவப் பராயத்திலிருந்து எளிமையாக வாழக் கற்றுக்கொண்டிருக்கும் இவர், இடது சாரி சிந்தனைகளினால் கவரப்பட்டு முதலில் இணைந்தது லங்கா சமசமாஜக்கட்சியாகும்.

இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை பறிப்பு உட்பட பல அநீதியான சட்டங்கள் அமுலுக்கு வந்த சமயங்களில் அம்மக்களுக்காக குரல் கொடுத்தவர். 1944 ஆம் ஆண்டில் அன்றைய அரசாங்க சபைக்கு பிபிலை தொகுதியிலிருந்து தெரிவானவர். தனக்குச் சரியெனப்பட்டதை துணிந்து பேசுவார்.

காலி மாநகர மேயராகவும் பணியாற்றியவர். காலி தொகுதியில் 1947 இலும் 1952 இலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1956 பாராளுமன்றத் தேர்தலில் பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் காலி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பண்டாரநாயக்கவின் அரசில் 1956 முதல் 1959 வரை கல்வி அமைச்சராகப் பணியாற்றினார். 1959 செப்டெம்பரில் பிரதமர் பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட போது இடைக்கால அரசுக்கு இவர் பிரதமராகவும், பாதுகாப்பு, வெளிவிவகார மற்றும் கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். ஓராண்டு காலத்துக்கு இவர் பிரதமர் பதவியில் இருந்தார்.



புத்த ரகித தேரர் வழக்கு விசாரணையின் பின்

அவர் பிரதமராக அலரி மாளிகைக்குள் அடியெடுத்து வைத்த போது அதுவரையில் அவர் பார்த்திராத பிரதமரின் படுக்கை அறையைப் பார்த்துவிட்டு, பேராச்சரியம் கொண்டார். "ஒரு மனிதர் படுத்துறங்குவதற்கு இத்தனை பெரிய அறை தேவைதானா?" நான் தனிமனிதனாக இங்கே வந்துள்ளேன்.

அத்துடன் பிரம்மச் சாரி வேறு. எனக்கு வேறு எந்தத் தொடர்புகளுமில்லை. படுத்துறங்குவதற்கு ஒரு சிறிய படுக்கை மாத்திரம் போதும் என்று அதிகாரிகளிடமும் அங்கிருந்த சேவகர்களிடமும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், அரசின் நடைமுறைகளை அவர்கள் அவருக்காக மாற்றவில்லை. படுக்க ஒரு சிறிய படுக்கை - உண்பதற்கு ஒரு தட்டம் - அருந்துவதற்கு ஒரு கோப்பை - அணிவதற்கு சில உடைகள் இவை தானே தனக்குத் தேவை. இந்த மாளிகை எனக்கு எதற்கு? என்று அவர் சொன்ன போதும் நிர்ப்பந்தங்களினால் அவர் மாளிகையை ஏற்க நேர்ந்தது.

வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டமையால் வெளிநாட்டு தலைவர்கள், அமைச்சர்கள், உள்நாட்டிலிருக்கும் வெளி நாட்டு இராஜதந்திரிகள் வந்து சந்திப்பதற்கு இந்த அலரிமாளிகை தான் உங்களுக்கு உகந்தது என அதிகாரிகள் வலியுறுத்தியமையால் அங்கு தங்குவதற்கு முடிவு செய்தார்.

இவர் அங்கம் வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த (மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்த) சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இவர் பிரதமராக இருப்பதை விரும்பவில்லை. இவருக்கு இடையூறுகளைச் செய்தனர்.

எளிமையை விரும்பியவர், ஊழலுக்கு எதிரானவர். இவர் பிரதமராகவும் முக்கிய அமைச்சுகளுக்கும் பொறுப்பாகவும் இருந்தால் தங்களால் அரசியலை வைத்து பிழைக்கமுடியாது என்பது அந்த எதிர்ப்பாளர்களின் எண்ணம்.

அவர்களின் இடையூறுகளை பொறுக்கமாட்டாத பிரதமர் தஹநாயக்க அதிரடியாக சில அமைச்சர்களை நீக்கினார். அவர்களின் பதவிகளை தன்னுடன் இணைந்து பணியாற்றக் கூடியவர்களிடம் ஒப்படைத்தார். எனினும் அது நிரந்தரமாக சாத்தியமாகவில்லை. இதனால் காலம்தாமதிக்காமல் அரசை கலைத்துவிட்டு தேர்தலுக்கு நாள் குறித்தார்.

இலங்கையில் அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தொகுதிவாரியாக நடந்தன.

அதனால் பணம் வீண் விரயமாவதை விரும்பாத தஹநாயக்க ஒரே நாளில் நாடு முழுவதற்கும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தும் நடைமுறையை அறிமுகப்படுத்தினார்.

(தொடரும்)



பளை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சியும் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் பளை பிரதேச வைத்தியசாலையில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்ட போது....



வட மாகாண முன்பள்ளிகளின் கலைவிழாவும் கண்காட்சியும் நேற்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உரையாற்றுவதையும் கலை நிகழ்வுகளில் பங்குபற்றிய முன்பள்ளி மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கந்தசுவாமி மலையையும் முருகன் ஆலயத்தையும் அபகரிக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்துங்கள்

## தென்னமரவாடி கிராம மக்கள் கோரிக்கை





(பனிக்கன்குளம்)

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட (தென்னன் மரபு அடி) தென்னமரவாடி என்ற கிராம மக்கள் பல்வேறு இன்னல்களின் மத்தியில் வாழ்ந்து வருவதோடு தமது பகுதியில் உள்ள கந்தசாமி மலையையும் அங்குள்ள முருகன் ஆலயத்தையும் காப்பாற்றி தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

தென்னமரவாடி கிராமத்தில் காணப்படும் தென்னன் என்ற அரசன் காலத்தில் இருந்த கந்தசாமி மலை மற்றும் அதன்மேல் உள்ள முருகன் ஆலயம் என்பன தாம் 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்றதன் பின்னர் அழிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தாம் மீள்குடியேறிய போது முருகன். சிலை மற்றும் வேல் என்பவற்றை வைத்து வழிபாடுகள் மேற்கொண்டபோது அவை அனைத்தும் பெரும்பான்மை இனத்தவரால் தகர்த்தழிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து குறித்த மலைப்பகுதியில் புத்தர் சிலை நிறுவுவதற்காக பௌத்த துறவிகள் வருகைதந்த போது தாம் தடுத்து நிறுத்தினோம். இதனை தொடர்ந்து பொலிஸார் தலையிட்டு இரண்டு தரப்பினரையும் குறித்த பகுதிக்கு செல்ல வேண்டாம் என தடை விதித்தனர்.

இதனை தொடர்ந்து தற்போது குறித்த மலையடிவாரத்தில் தொல்பொருள் திணைக்களம் தமது பெயர்ப்பலகையை நிறுவி கட்டடம் ஒன்றை அமைத்து வருகிறது. இந்தச் சூழலில் தொல்பொருள் திணைக்களம் அபகரித்து தம்மை மலைக்கு செல்லவிடாது தடுத்து பெரும்பான்மையினரின் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைக்கு துணைபோய் விடுவார்கள். இதனை உரியதரப்புக்கள் கருத்தில் கொண்டு எமது மலையையும் எமது முருகன் ஆலயத்தையும் காத்து எம்மை குறித்த மலையில் உள்ள எமது ஆலயத்தை வழிபட ஆவன செய்யுமாறு கோருகின்றனர்

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த மக்கள் நாம் 2010 ஆம் ஆண்டு மீண்டும் மீள்குடியேற்றி குறித்த பகுதியில் வேல் ஒன்றை வைத்து வழிபட்டோம். அதனை பிடுங்கி எறிந்தனர். அதனை தொடர்ந்து ஒரு முருகன் சிலை வைத்தோம். அதனை அடித்து உடைத்தனர். அதனை மீளவும் நிறுவினோம். அதன் பின்னர் அந்த சிலை உடைக்கப்பட்டு சிலையையே காணவில்லை. இவ்வாறு எமது ஆலயம் திட்டமிட்டு பெரும்பான்மை இனத்தவரால் உடைக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து புத்தர் சிலை வைக்கும் முயற்சியில் ஏற்பட்ட குழப்பத்தில் யாரும் மலைக்குச் செல்லக் கூடாது என பொலிஸார் தெரிவித்துவிட்டு தற்போது இவ்வாறான ஒரு செயலை செய்கிறார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தனர்.

இந்த விடயமாக குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் கந்தையா பரமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கிராமத்துக்கு ஒரு பௌத்த மதகுருவோ அல்லது வேறு முஸ்லிம் மதகுருவோ வந்ததில்லை. இது சேர சோழ பாண்டிய கால இற்றைக்கு சுமார் 300 வருடங்களுக்கு மேற்பட்ட முருகன் கோவில். இந்த கோவிலுக்கு வரலாறு உண்டு. இது ஒரு வரலாறு படைத்த மலை. 1962 ஆம் ஆண்டுமுதல் இந்த கோவிலில் நான் வழிபட்டு வந்திருக்கிறேன்.

இந்த இடத்தில் இந்த ஆலயத்தோடு இணைந்த எங்களது காணிகள் எல்லாம் 1803 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலத்து அரசினால் உறுதிகள் வழங்கப்பட்டு உள்ளது. அந்த ஆவணங்கள் எம்மிடம் உள்ளன.

ஆகவே எமது இந்த பூர்வீக கிராமம் நாங்கள் 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்ற பின்னர் இது பெரும்பான்மை இனத்தவரால் சுவீகரிக்கப்பட்டது.

இந்நிலையில் எமது இந்த வரலாற்று தொன்மை மிக்க ஆலயத்தையும் அபகரிக்க இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் இவற்றை தடுத்து நிறுத்தி தருமாறு கோரினர். (2-281)

# "தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சும் இராட்சத அட்டை"



(ஹற்றன்)

மலையகம் முழுவதும் பல தோட்டங்களில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது. இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் கொடும்பாவியை எரித்து. எதிர்ப்பை வெளியிட்டனர்.

1,000 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்துவிட்டு. தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கோரிக்கை விடுத்ததற்கு அமைய, கடந்த 10 தினங்களாக, இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், இந்தப் பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறும் இந்தச் சம்பள விவகாரம் தொடர்பில், எதிர்வரும் 19ஆம் திகதியன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும், இ.தொ.கா தலைவர் அறிவித்தார்.

இ.தொ.கா. தலைவரின் கோரிக்கைக்கு அமைவாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த பல தோட்டங்களைச் சேர்ந்த தோட்ட மக்களும், இ.தொ.காவுக்கு எதிராக, ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

அந்த வகையில், மடக்கும்புர தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக, "தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சும் இராட்சத அட்டை" என்று, ஆறுமுகன் தொண்டமானை வர்ணித்து, அவரது கொடும்பாவி எரிக்கப்பட்டது.

அத்தோடு, "மீசைக்கார அண்ணாச்சி, ஆயிரம் ரூபாய் எண்ணாச்சி" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

119



> “இறுதியாக இலங்கையின் கடைசித் தேசாதிபதி, வான் டி கிறாப் (Van de Graaf) இன் 1794 இற் கான ஆண்டு இறுதி ஆண்டறிக்கையிற் கூறப்பட்ட ஒரு முக்கியமான விடயத்தை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானமாகும். ஒரு காலம் யாழ்ப்பாணத் தீபகற்பத்து மக்களில் அநேக மானோர் சிலர் சிறந்த நிலையில் வாழ்ந்தனர். ஆனால் இன்று அவர்களில் அநேகமானோர் மேலும் மேலும் வறியவர்களா கின்றனர்”

## டச்சுக்காரரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

பரவலாக இப்பிரதேசங்களில் அவர்களது ஆதிக்கம் ஏற்படவில்லை. இதனால்தான் வரி சம்பந்தமான வருமானம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது.

ஆனால் மேற்படி துறைமுகத்தினூடாக அதிகளவு வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக அவற்றிலிருந்து கூடிய வருமானத்தைப் பெறமுடிந்தது.

ஆனால் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நிலைமை முற்றிலும் வித்தியாசமாக இருப்பதை மேற்படி புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன.

டச்சுக்காரர் 1658 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய நிலையில் போர்த்துக்கீசர் நடைமுறைப்படுத்திய நிர்வாக அமைப்பு முறையையே தொடர்ந்தும் கடைப்பிடித்தார்கள்.

உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் நிர்வாகக் கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு தோம்புப் பதிவேடும் பூர்த்தியாக்கப்பட்டது. அத்தோடு யாழ்ப்பாணப் பிரதேசம் அதிகளவு சனத்தொகையைக் கொண்டு காணப்பட்டதன் விளைவாக வியாபாரம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

பல்வேறுபட்ட வரிமுறைகளையும் உடனடியாக அமுல்படுத்தி மக்களிடமிருந்து அதிகளவு பணத்தைப் பெற அவர்களால் முடிந்தது.

இதன் விளைவாக மேற்படி காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வருமானம் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களை விடப் பன்மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது. அதே வேளையில் செலவும் வருமானத்துடன் ஒப்பிடும்போது பெருமளவு குறைந்து காணப்பட்டது.

சுருங்கக்கூறின் அதிகளவு சனத்தொகையையும் அதிகளவு நிலப்பரப்பையும் கொண்டு காணப்பட்ட கொழும்பு, காலிப் பிரதேசங்களிலிருந்து கிடைத்த வருமானத்தை விட யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து கிடைத்த வருமானம் பன்மடங்கு உயர்ந்து காணப்பட்டது.

அத்தோடு கொழும்பு, காலி போன்ற இடங்களில் வருமானத்தை விடச் செலவினங்கள் இக்காலகட்டத்தில் அதிகரித்துக் காணப்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வருமானம் பன்மடங்கு உயர்ந்தும் செலவினங்கள் குறைந்தும் காணப்பட்டு டச்சுக்காரரின் நிகர வருமானம் மிகையாகக் காணப்பட்டது.

அத்தோடு யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து கிடைத்த நிகர வருமானத்தின் மூலம் தான் டச்சுக்காரர் தமது நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்திருப்பதாக டச்சு ஆவணங்களிலிருந்தும் புள்ளி விபரங்களிலிருந்தும் தெளிவாகத் தெரியவருகின்றது.

சுருங்கக்கூறின் தமிழ்ப் பிரதேசங்களினூடாக நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகளை டச்சுக்காரர் தமது ஏகபோக வர்த்தக உரிமைக் கொள்கையாக நடைமுறைப்படுத்தி அதனால் கிடைக்கப்பெற்ற முழு இலாபத்தையும் தமதாக்கிப் பெருமளவு செல்வத்தைக் குவித்திருக்கின்றார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள காணிகளில் கணிசமான அளவினை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தி அவற்றை விற்று எதுவித முதலும் இல்லாமல் நிகர இலாபம் பெற்றிருக்கின்றார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் நிலவரி, உற்பத்தி வரி, தானிய வரி, தலைவரி, ஆள்வரி, தொழில்வரி, அதிகாரி வரி என்பன போன்ற வரிகளை அறிமுகப்படுத்தி அதிக வருமானம் பெற்றிருக்கின்றார்கள். ஊழியம் எனும் இலவச வேலைவாங்கும் திட்டத்தைப் பயன்படுத்தி தமக்கு வேண்டிய வேலைகள் யாவற்றையும் எதுவித செலவுமின்றி இலவசமாகச் செய்து முடித்திருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள வளங்கள் அத்தனையும் டச்சுக்காரரின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன் அவர்களது செல்வத்திற்கும் அடிப்படையானது.

பல்வேறுபட்ட வரிகள் என்ற பேரில் தமிழ்ப் பிரதேச மக்களை மிகவும் கச்சிதமாகச் சுரண்டியிருக்கின்றார்கள் என்பதனையே மேற்படி ஆய்வும் புள்ளிவிபரங்களும் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசமும் அப்பிரதேச மக்களுமே இவ்விதத்திற் பாரதூரமாக பாதிக்கப்பட்டவர்கள் என்பதனையும் மேற்படி ஆய்வும் புள்ளிவிபரங்களும் காட்டுகின்றன.

இறுதியாக இலங்கையின் கடைசித் தேசாதிபதி, வான் டி கிறாப் (Van de Graaf) இன் 1794 இற்கான ஆண்டு இறுதி ஆண்டறிக்கையிற் கூறப்பட்ட ஒரு முக்கியமான விடயத்தை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானமாகும்

ஒருகாலம் யாழ்ப்பாணத் தீபகற்பத்து மக்களில் அநேகமானோர் சிலர் சிறந்த நிலையில் வாழ்ந்தனர். ஆனால் இன்று அவர்களில் அநேகமானோர் மேலும் மேலும் வறியவர்களாகின்றனர்.


தமிழ்ப் பிரதேசமும் தமிழ் மக்களும் டச்சுக்காரரினால் எவ்வளவு தூரம் சுரண்டப்பட்டுள்ளனர் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

(தொடரும்)

# ரணில்-சம்பந்தன் இடையே இரகசிய ஒப்பந்தம்
## சமூக வலைத்தளங்களில் ஆவணப் பிரதி வெளியீடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஒரு ஆவணப் பிரதியானது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.



பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு காணப்படுகின்றமையால் அவரைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளியாக செயற்பட்டு வருவதாகவும் அவர்களுடன் மறைமுகமாக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளமையினாலுமே கூட்டமைப்பினர் ரணிலுக்கு ஆதரவான பிரேரணைக்கு சாதகமாக பாராளுமன்றில் வாக்களித்தனர் என குற்றஞ்சாட்டியிருந்தனர்.

எனினும் இவர்களின் குற்றச்சாட்டை மறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் பங்காளியாக இணையாது எதிர்க் கட்சியாக இருந்து ஆதரவு வழங்குவது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரம சிங்க மீதான நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததாக தெரிவித்தனர்.

இந் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இரா. சம்பந்தனுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கான ஒரு ஆவண வடிவம் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

குறித்த அந்த ஆவணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து வடகிழக்கு மாகாணமாக மாற்றியமைப்பதாகவும், வடகிழக்கு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை முற்றாக ஒழிப்பதாகவும், அப் பகுதிகளில் உள்ள புதிய விகாரைகளை நிர்மாணிப்பதை கட்டுப்படுத்துதல் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.


அத்துடன் அந்த ஒப்பந்தத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பமும் சம்பந்தனின் கையொப்பமும் இடப்பட்டிருந்தது.

எனினும் இவ் ஒப்பந்தமான ஆவணமானது முற்றிலும் சிங்கள மொழியில் இருப்பதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதில் கையெழுத்திடுவதற்கான சாத்தியம் இல்லை.

ஆகவே இவ் ஒப்பந்தமானது ஒரு போலியானதாக இருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை அரசியல் அமைப்பில் ஒற்றை ஆட்சிக்குள் பிளவுபடாத, பிளவுபடுத்த முடியாத இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றினை பெற்றுக்கொடுக்க தயாராக உள்ளோம். தமிழ் மக்களுடன் கலந்துரையாடி சகல இனத்தவருக்கும், சகல மதத்தவருக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை அரசியல் அமைப்பின் மூலமாக பெற்றுக்கொடுக்கும் நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புகையிரதம் தடம்புரண்டதில் புகையிரத சேவைகள் பாதிப்பு



(மருதானை)

மருதானை புகையிரத மார்க்கத்தில் 7 ஆம் மற்றும் 8 ஆம் தண்டவாளத்திற்குட்பட்ட பகுதியில் புகையிரதம் ஒன்று தடம்புரண்டுள்ளது.

நேற்றுக் காலை 8.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

புகையிரதம் தடம்புரண்ட காரணத்தால் புகையிரத சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (இ-7)




### திலகவதி

மரம் வைப்பவனுக்கு கூலி இல்லை
வெட்டுபவனுக்கே. வைப்பவனுக்கும் கூலி என
சொல்லுங்கள் இவ்வுலகமே பசுமையாகிவிடும்



### ஆறுமுகன்

அளவு கடந்த கஷ்டத்தை அனுபவிக்கிறாய்
என்று வருத்தம் அடையாதே...
உனக்காக எல்லையில்லாத சந்தோசம்
காத்திருக்கிறது கவலைப்படாதே



### கந்தசாமி

செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள்
அனைத்தும் செய்ய முடியாதவைகள் என்று
முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவை தான்



### வனஜா

உண்மையான அன்பை யாரிடமும்
சொல்லிப் புரிய வைக்க முடியாது.
அந்த அன்புக்கு உரிமையானவர்கள்
மட்டுமே அதை உணர முடியும்



### சிற்பி

வாழ்வதற்கு செலவு மிகக் குறைவு.
அடுத்தவர்களைப் போல வாழ
நினைப்பதற்குத்தான் செலவு அதிகம்



### கபிலன்

பணம் என்ற காகிதத்தால் மட்டுமே
மனிதனைக் கசக்கி எறிய முடியும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 1000 ரூபா சம்பள உயர்வு கோரி
# தோட்டத் தொழிற் சங்கங்களுடன் 16 இல் மீண்டும் பேச்சுவார்த்தை

## ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் பேச்சுவார்த்தைக்கு வருவதில்லை என ஊடகங்களில் வெளியான செய்தியை மறுத்துள்ள முதலாளிமார் சம்மேளனம் நாளை மறுதினம் 16 ஆம் திகதி வழங்கவுள்ள சம்பளம் தொடர்பில் தீர்மானம் எடுக்க பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை முதலாளிமார் சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க வீரசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு நேற்று முன்தினம் மாலை தொலைநகல் ஊடாக அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பாக விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த ஆறுமுகன் தொண் டமான்,

ஜனாதிபதியை சந்திப்பதற்காக கடந்த 11 ஆம் திகதி இரவு 8 மணியளவில் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. சந்திப்பு நடைபெறும்போது இரவு 9 மணி ஆகிவிட்டது. இதனையடுத்து ஜனாதிபதி கேட்டுக்கொண்டதற்கமைய பணிப்பகிஷ்கரிப்பை வாபஸ் பெற்று தொழிலாளர்களைப் பணிக்குச் செல்லும்படி ஊடகங்கள் ஊடாக அறிவித்தல் விடுத்தேன்.



சில தோட்டங்களில் இந்த அறிவிப்பு முறையாகக் கிடைக்காத பட்சத்தில் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் பல இடங்களில் பணிக்கு செல்லாது இருந்துள்ளனர். அதேவேளை தொழிலாளர்கள் வழமையான தொழிலுக்கு செல்ல வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் பேச்சுவார்த்தையை முதலாளிமார் சம்மேளனத்துடன் முன்னெடுக்கப்போவதாக தெரிவித்தார்.

அதேவேளை முன்னெடுக்கப்படும் தொழிலாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பை வாபஸ் பெற்று தொழிலாளர்களைத் தொழிலுக்கு அனுப்ப கேட்டுக்கொண்டார். இதனடிப்படையிலேயே நாட்டின் தலைவரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்த நிலையில் பணிப்பகிஷ்கரிப்பை கைவிட நாம் தீர்மானித்தோம்.

இது இவ்வாறிருக்க பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு இ.தொ.கா. அழைப்பு விடுவதற்கு முன்பாக கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பெருந்தோட்ட கூட்டமைப்பு தொழிற்சங்க தலைவர் எஸ்.இராமநாதன் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோருக்கு தொலைபேசி ஊடாக தெரிவித்துவிட்டே இந்த போராட்டத்திற்கான அழைப்பை தொழிலாளர்களுக்கு காங்கிரஸ் விடுத்தது. இதை அவர்கள் மறுப்பார்கள் என்றால் ஊடகங்கள் அவர்களிடமே வினவ வேண்டும்.

நான் வித்தை காட்டுவதாக சிலர் சொல்கின்றார்கள் என என்னிடம் வினவுகின்றார்கள். நான் வித்தைக்காரன் ஆகவில்லை. வித்தைக்காரனாகிய பின் நான் காட்டுவேன் எனப் பதிலளித்தார்.

அதேநேரத்தில் கடற்கரையில் போராட்டம் செய்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெரும்பான்மை இன கட்சிகள், வர்த்தகர்கள் என தொழிலாளர்களின் போராட்டத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் கடந்த 11 ஆம் திகதி இரவு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொண்டேன். இதேநேரத்தில் நேற்று முன்தினம் பத்திரிகைகளில் முதலாளிமார் சம்மேளனம் இனிமேல் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுப்படப் போவதில்லை என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் முதலாளிமார் சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் தொலைநகல் ஊடாக நாளை மறுதினம் 16 ஆம் திகதி சம்பளம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தொலைநகல் ஊடாக அழைப்பு விடுத்துள்ளார். (அவர் அனுப்பிய தொலைநகல் நகலை ஊடகங்களுக்கும் காண்பித்தார்) பத்திரிகை செய்தி தொடர்பாக நான் முதலாளிமார் சம்மேளனத்திடம் வினவியபோது, பத்திரிகைகளில் தவறாக இந்த செய்தி பிரசுரமாகியுள்ளது என தெரிவித்ததாவும், அவர் இதன்போது ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.(இ-7)

# வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள் தோட்டத் தொழிலாளர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் உரிய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உடன்பாட்டுக்கு வரும் வரையில் வேலை நிறுத்தத்தை கைவிட்டுப் பணிகளுக்கு திரும்புமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து தோட்டத் தொழிலாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய வேலை நிறுத்தம் மற்றும் சம்பளப் பிரச்சினை தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சரியான சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என தான் எதிர்பார்க்கும் அதேவேளை தேயிலைத் துறையின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த சம்பளப் பிரச்சினை தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்துடன் எதிர்வரும் 19 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 350 | 500 |
| தக்காளி | 300 | 320 | — | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 35 | 40 |
| கோவா | 120 | 120 | 150 | 120 |
| கரட் | 200 | 200 | 250 | 250 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 85 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 220 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 120 | 240 |
| பீற்றூட் | 200 | 160 | — | 200 |
| கறிமிளகாய் | 350 | 280 | 200 | 320 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 160 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 40 | 60 |
| தேசிக்காய் | 500 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 160 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | '130 | 80 |

## ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் வயல் பரப்பு கைவிடப்பட்டுள்ளது

கைவிடப்பட்ட வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் இம்முறை பெரும்போகத்தில் 27 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விவசாயத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.கடந்த சிறுபோகத்தின் போது கைவிடப்பட்டிருந்த 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் வயல் பரப்பு கைவிடப்பட்டுள்ளதாகவும் அதில் ஒரு இலட்சத்து 14 ஏக்கர் நிலப்பரப்பு பயிர் செய்வதற்கு சிறப்பான மட்டத்தில் உள்ளதாக விவசாயத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## தேரர் உள்ளிட்ட மூவரை கடத்திய அறுவர் கைது

(நாரஹேன்பிட்டி)

நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றின் தேரர் உள்ளிட்ட மூன்று பேரை கடந்த 9 ஆம் திகதி கடத்தி, தொல்பொருள் மதிப்புள்ள புத்தர் சிலையை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்ட தேரர் உள்ளிட்ட மூவரையும் இடையில் கைவிட்டு சென்றுள்ள நிலையில், பின்னர் பொலிஸார் அவர்களை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்டப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட புத்தர் சிலை, ஐந்து ஓலைச்சுவடிகள், வலம்புரி சங்கு, டிபெண்டர் வாகனம் மற்றும் இரண்டு கையடக்க தொலைபேசிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

## முப்படையினருக்கான பட்டமளிப்பு



(கொழும்பு)

சபுகஸ்கந்த பாதுகாப்புச் சேவைகள் கட்டளைகள் மற்றும் பதவிநிலை கல்லூரியின் 12 ஆவது கற்கை நெறியை நிறைவு செய்த முப்படையினருக்கான பட்டமளிப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன படைவீரருக்கு விருது வழங்கிக் கௌரவித்த போது...

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உயிர் கொல்லும் டெங்கை உருவெடுக்காது தடுப்போம்...எனும் தொனிப்பொருளில் கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து நடத்தும் மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் பூரண அனுசரணையுடன் கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலைய முன்றலிலிருந்து ஆரம்பமாகி கருகம்பனை கிராமத்திலும் கூவில், கீரிமலை, நகுலேஸ்வரம் கிராம உத்தியோகத்தர் பிரிவு உட்பட கிராமத்தை சுற்றியுள்ள அயற்கிராமங்கள் போன்றவற்றில் இச் சிரமதான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-7)

## குற்றச்சாட்டு தொடர்பில் அறிவிக்கப்படவில்லை

### சமன் ரத்னபிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் எந்தவொரு சட்டரீதியான நிறுவனமும் இதுவரை அறிவிக்கவில்லை என தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்:ஜனநாயகத்திற்கான தொழிற்சங்க ஒன்றியம் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, சமன் ரத்னபிரிய வெளியிட்ட கருத்து தொடர்பில் தாய் நாட்டை பாதுகாக்கும் தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள் பொலிஸ் தலைமையகத்தில் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டுக்கு மேலதிக விளக்கங்களை வழங்குவதற்காக அங்கு வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# ஆசை ராஜா



ஒரு நாட்டில் ஒரு ராஜா இருந்தார். உலகத்திலுள்ள அத்தனை பொருட்கள் மீதும் அவருக்கு ஆசை. அவர் ஆசைப்படாத பொருளே இல்லை என்று சொல்லலாம். சுருக்கமாகச் சொன்னால் அவர் ஆசை மீதே அவருக்கு ஆசை. அதனால் மக்கள் அவரை ஆசைராஜா என்று அழைத்தார்கள். ஆசைராஜாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டாமா? உடனே அவருடைய அமைச்சர்கள் அவர் ஆசைப்பட்ட எல்லாத்தையும் வரவழைத்துக் கொடுத்தனர். அது உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் என்ன விலையாக இருந்தாலும் வரவழைத்து விடுவார்கள்.

இப்படி ஆசைராஜா உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அனுபவித்து விட்டார். உடைகளா? உலகத்திலேயே மிகச் சிறந்த உடைகள் அவரிடம் நிறைய இருந்தன. அவற்றையெல்லாம் உடுத்தி உடுத்தி அவருக்குச் சலிப்பு வந்துவிட்டது.

அதேபோல உலகிலே மிகச் சிறந்த உணவுகளைச் சாப்பிட ஆசை கொண்டார் ராஜா. உடனே அவருடைய அமைச்சர்கள் உலகத்திலுள்ள அத்தனை சிறந்த சாப்பாடுகளையும் சமைக்கும் சமையல்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். ஆசை ராஜாவுக்கு விதவிதமாய் சாப்பாடு செய்து கொடுத்தார்கள். சில நாட்களிலே ஆசைராஜாவுக்கு அதிலும் சலிப்பு வந்துவிட்டது.

உலகத்திலே மிக மென்மையான மெத்தை அவருக்குக் கசந்துவிட்டது. மிகச் சிறந்த கலைப்பொருட்களும் அவருடைய ஆசைக்கு முன்னால் வெகு நாட்கள் நிற்க முடியவில்லை.

ஆசை ராஜாவுக்கு இப்போது எதுவும் ஆர்வமூட்டவில்லை. அவர் எப்போதும் எரிச்சலுடனும் கோபத்துடனும் இருந்தார். இதனால் அமைச்சர்கள் கவலை கொண்டார்கள். உடனே நாடெங்கும் முரசு கொட்டி ஆசை ராஜாவின் ஆசையை யார் தூண்டுகிறார்களோ, அவர்களுக்கு ஆசை ராஜாவின் அருமை மகளான இளவரசியைத் திருமணம் செய்து கொடுப்பதாக அறிவிப்பு வெளியிட்டார்கள். கூடவே பாதி நாட்டையும் தருவதாக அறிவிப்பு செய்தார்.

இந்த அறிவிப்பைக் கேள்விப்பட்டு உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் இளைஞர்கள் வந்தார்கள். ஒவ்வொருத்தரும் விதவிதமாகப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், உணவுப் பொருட்கள், கலைப் பொருட்கள், கவிதைகள் என்று ஆசைராஜாவின் முன்னால் வந்து காண்பித்தார்கள். ஆசை ராஜாவுக்கு எதுவும் ஆர்வத்தைத் தூண்டவில்லை. ஆசையை மூட்டவில்லை. வந்த எல்லோரும் ஏமாற்றத்தோடு திரும்பிப் போனார்கள்.

அப்போது அரண்மனைக்குத் துணி துவைக்கும் சலவைக்காரன் சலவைத்துணியைக் கொடுக்கப்போகும் போது இளவரசியைப் பார்த்திட்டான். மணம் முடித்தால் இளவரசியைத்தான் மணம் முடிக்க வேண்டும் என்று மனதில் சபதம் எடுத்துக் கொண்டான். ஆசைராஜாவின் அறிவிப்பை அவனும் கேட்டான்.

அவனும் என்னவெல்லாமோ யோசித்துப் பார்த்தான். எதுவும் பிடிபடவில்லை. இளவரசியைக் கல்யாணம் முடிக்க முடியாமல் போய்விடுமே என்று கவலைப்பட்டான். கவலை அவனைப் பாடாய்படுத்தியது. அவன் மெலிந்து துரும்பாகி விட்டான்.

அதைப் பார்த்த அவனுடைய பாட்டி, "ஏன்டா பேரப்புள்ள என்னடா கவலை... எதுவாயிருந்தாலும் சொல்லு ..." என்று கேட்டாள். கடைசியில் அவன் பாட்டியிடம் தன் கவலையைச் சொன்னான்.

அவனுடைய பாட்டியும், "அடலூசுப் பயலே, இதுக்குத் தானா இம்புட்டு கவலைப்பட்டே..." என்று சொல்லி அவனை அருகில் அழைத்து காதில் இரகசியம் சொன்னாள். அதைக் கேட்ட அவனும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

அன்று அரசவையில் வழக்கம்போல ஆசைராஜா எரிச்சலுடன் உட்கார்ந்திருந்தார். சற்று முன்னர் அவர் முன்னால் பல்லியையும் பாச்சாவையும் கொண்டுவந்த இரண்டு பேரை சிறையில் அடைக்கச் சொல்லிவிட்டார். மூன்றாவதாக அரண்மனைச் சலவைக்காரன் போனான். அவன் கையில் எதுவும் கொண்டு போகவில்லை. அமைச்சர்கள் அவனிடம், "ராஜாவுக்கு என்ன கொண்டு வந்தாய்?" என்று கேட்டார்கள்.

அவன் அமைதியாக அரசவையில் உள்ளவர்களை ஒரு முறை நிதானமாகப் பார்த்தான். பின்னர் மடியிலிருந்து ஒரு புளியம்பழத்தை எடுத்து எல்லோருக்கும் காண்பித்து விட்டு வாயில் வைத்து ருசித்து சப்புக் கொட்டினான்.

அதைப் பார்த்த ஆசை ராஜாவுக்கு வாயில் தானாக எச்சில் ஊறியது. அரசவையில் இருந்த அமைச்சர்கள் எல்லோருடைய வாயிலும் எச்சில் வழிந்தது. ஆசை ராஜா சிம்மாசனத்திலிருந்து எழுந்து ஓடி வந்தார்.

"என்னால் ஆசையை அடக்க முடியலை.. அடக்க முடியலை..." என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே சலவைக்காரனிடம் கையேந்தினார். அவனும் தயாராக வைத்திருந்த இன்னொரு புளியம்பழத்தை எடுத்து ஆசைராஜாவிடம் கொடுத்தான். ஆசைராஜா முகத்தைச் சுழித்து, பல் கூச சப்புக் கொட்டி புளியம்பழத்தை ருசித்தார். அமைச்சர்களும் ருசித்தார்கள்.

ஆசைராஜா சொன்ன மாதிரி பாதி நாட்டையும் கொடுத்து இளவரசியையும் கல்யாணம் செய்து கொடுத்தார். அதன் பிறகு என்ன செய்தார் தெரியுமா? நாடெங்கும் புளிய மரங்களை நட்டு வளர்த்தார்.

அதன் பிறகு அவருடைய ஆசை நோய் அடங்கிவிட்டது. மக்களும் அவரவர் வேலைகளைப் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

## சிட்டே சிட்டே பறந்து வா!

சிட்டே சிட்டே பறந்து வா!
சிறகை சிறகை விரித்து வா!
கொட்டிக் கிடக்கும் மணிகளைக்
கொத்தி கொத்தித் திண்ண வா!

ஆற்று நீரில் குளிக்கிறாய்!
அழகாய் துள்ளி ஆடுகிறாய்!
சேற்று வயலில் அமர்கிறாய்!
திறந்த வெளியில் திரிகிறாய்!

உன்னைப் போல பறக்கனும்
உயர உயர செல்லனும்!
என்னை அழைத்துச் சென்றிடு
ஏற்ற இடத்தைக் காட்டிடு!

## பழமொழிகள்

• எறும்பு தின்றால் கண்கள் நன்றாகத் தெரியும்.

விளக்கம்: இது உண்மை அல்ல... எறும்பு தின்னி என்னும் உயிரினத்திற்கு கண்கள் நன்றாகத் தெரியும் என்பதுதான் உண்மை.

• அடியாத மாடு படியாது.

விளக்கம்: உண்மை பொருள் என்னவென்றால் மாட்டின் கால்களுக்கு லாடம் அடித்தால் தான் அதனால் கடுமையான வேலைகளை (உழுதல் போன்ற) செய்ய முடியும் என்பதுதான்.

• பசி வந்திட பத்தும் பறந்து போகும்.

விளக்கம்: அறிவுடைமை, இன்சொல், ஈகை, தவம், காதல், தானம், தொழில், கல்வி, குலப்பெருமை, மானம் ஆகிய பத்து குணங்களும் பசி என்று வந்து விட்டால் பறந்து போகும் என்பது உண்மை.

• மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.

விளக்கம்: மண் குதிரை- நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை. அதாவது ஆற்றுப்படுகைகளில் மண் குதிர்கள் இருக்கும். அவற்றில் கால் வைத்தால் கால்கள் உள்ளே பதியும். அந்த மண் குதிரை (குதிர் ஐ) நம்பி ஆற்றில் இறங்காதே என்பது தான் உண்மை.

கோபத்தை அடக்கு: இல்லையானால்
அது உன்னை அடக்கி விடும்.
- ஹொரோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புதிய பிரதமர் மைத்திரி பக்கமா? ரணில் பக்கமா நிற்பார்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைத்தது செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அல்லது நடைமுறையில் உள்ள பாராளுமன்ற ஆட்சி நான்கு வருடங்களை நிறைவு செய்திருந்தால் மட்டுமே பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

மாறாக மேற்குறித்த இரண்டு நிபந்தனைகளில் ஒன்றேனும் பூர்த்தியாகாத நிலையில், பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பது நீதிமன்றத் தீர்ப்பாகும்.

இத்தீர்ப்புக்கு முன்னதாக, பாராளுமன்றத்தைக் கலைத்தது சட்டத்துக்கு முரணானது என உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுத் தொடர்பில் உயர் நீதிமன்றில் பிரசன்னமாகிய சட்டமா அதிபர் திணைக்களம்; பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது எனக் கூறியிருந்ததும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரத்தைக் குறைப்புச் செய்வேன் என ஒற்றைக் காலில் நின்று தனக்கான அதிகாரத்தைக் குறைத்த ஜனாதிபதி மைத்திரி, அதிகாரக் குறைப்புக்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பாராளுமன்றில் பெறுவதற்காக;

எனக்கிருக்கும் அதிகாரத்தைக் குறைப்பதற்காக உங்களிடம் அனுமதி கேட்கிறேன் என்று கூறி உலகையே ஒரு கணம் தன்னைத் திரும்பிப் பார்க்க வைத்தவர்.

இவ்வாறு அதிகாரத்தைக் குறைப்புச் செய்த ஜனாதிபதி மைத்திரி பின்னாளில் தனக்கு இல்லாத அதிகாரத்தைப் பிரயோகித்தார் எனும்போது அரசியல் என்பது ஆச்சரியமான இயல் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இதுதவிர, பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னதாக சட்டநிபுணர்களுடனும் முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவருடனும் ஜனாதிபதி மைத்திரி கலந்தாலோசித்த பின்பே பாராளுமன்றக் கலைப்புக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பில் கையெழுத்திட்டார் என்ற தகவல்களும் உண்டு.

இவை ஜனாதிபதியைத் தவறான பாதையில் பயணிக்க வைத்த ஆலோசனை என்பதை இலங்கைத் திருநாட்டின் அத்தனை மக்களும் அறிந்து கொள்வது அவசியம். இவை நடந்து முடிந்தவற்றின் மீள்பார்வை.

இனி நடக்கப்போவது என்ன? மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க ஜனாதிபதி தயாரா? அல்லது எவரைத்தான் பிரதமராக ஜனாதிபதி நியமிப்பாரா? என்ற விடை காணமுடியாத விசித்திரம் நீண்டு செல்கையில்,

ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த இன்னொருவர் பிரதமராக நியமிக்கப்பட்டு பதவியை ஏற்றுக் கொண்டால் அவர் மைத்திரி பக்கமா ரணில் பக்கமா நிற்பார் என்பதற்கான விடையை ஊகித்தறிவதுதான் ஒரே வழி.

எதுவாயினும் ரணில் தவிர்ந்த யார் பிரதமராக வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாந்து போவது நிறுதிட்டமான உண்மை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் 58 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திரு முன்னிலையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ.து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக் குருக்கள் (ரவி), கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன கௌரவ விருந்தினர்களாக ச.விநாயகமூர்த்தி (கரவெட்டி), ச.தட்சணாமூர்த்தி (மீசாலை), திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து (வவுனியா) ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவிப்பு நிகழ்வு அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொருளாளர் ச.முகுந்தன் நெறிப்படுத்தலில் நடைபெறும். கௌரவ பட்டங்களில் சைவாகமபூஷணம் பட்டத்தினை சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ் வரக் குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக் குருக்கள் (ரவி) சைவப்புரவலர் பட்டத்தினை யாழ்ப்பாணம் சிவ கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் கனகசபை அருள்நேசன், பௌராணிகர் கௌரவத்தினை பௌராணிகர்கள் ச.விநாயகமூர்த்தி, ச.தட்சணாமூர்த்தி மூத்த சைவப்புலவர் கௌரவத்தினை சைவப்புலவர் திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த முதுகலைமாணி பட்டம் பெற்ற சைவப்புலவர்கள் கௌரவத்தினை சாமித்தம்பி பொன்னுத்துரை, திருமதி பதுமாவதி தங்கராசா, திருமதி புஸ்பலட்சுமி விமலகாந்தன ஆகியோர் பெறவுள்ளனர்.

சைவநாதம் 8 மலர் வெளியீட்டில் வெளியீட்டுரையினை சைவப்புலவர் சி.கா. கமலநாதன், நயப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-29)

## திருவாசக அரண்மனையில் திருவெம்பாவை

திருவெம்பாவையை முன்னிட்டு நாவற்குழி திருவாசக அரண்மனையில் இன்று முதல் தொடர்ந்து பத்து நாட்களும் காலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி, 6 மணிக்கு திருவெம் பாவை பூசை, 10 மணிக்கு சங்காபிஷேகம் என்பன நடைபெறும். (ம)

## பொலிஸ் அதிரடிப்படைக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

பொலிஸ் அதிரடி படையினரின் 600 பேருக்கான பதவி வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக, கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கான பயிற்சி கானஸ்டபிள்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நவம்பர் 30ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை கவனத்தில் கொண்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகமைய பொதுமக்கள் விண்ணப்பங்களை முன் வைக்கலாம் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலை எரித்து கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாக தெரிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை எரித்து கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கான சிவில் சமூக அமைப்புகள் கொழும்பு லிப்டன் சுற்று வட்டாரத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள், புதிய தலைமுறையினர், ஜனநாயகம் மற்றும் இலங்கை பெண்கள் அமைப்புக்கள் உட்பட 17 சங்கங்கள் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. (இ-7)

## ‘ஆத்ம தரிசனம்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இரத்தின சபாபதி புண்ணிய மூர்த்தியின் "ஆத்மதரிசனம்" நூல்வெளியீடு நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் 6 மணிவரை யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் சைவப்புலவர், சைவசித்தாந்த சாகரம், வைத்திய கலாநிதி ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து தலைமையில் நடைபெறும்.

இதில் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆசியுரை வழங்குவதோடு நூலை வெளியிட்டு வைப்பார். வைத்திய கலாநிதி எஸ்.பால சுப்பிரமணியம் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (இ-5)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பெருந்தன்மை இறையின் இயல்பு

வளர்ச்சியில்லை-ஆசை வெறுமை ஆர்வமின்மை எந்த சாரமும் இல்லை என்று நீங்கள் வாழ்க்கையில் தேக்கத்தை உணரும் போது-நீங்கள் என்ன செய்வீர்கள்?

**அதற்குத் தீர்வு இங்கே உள்ளது.தாராள மனப்பாங்கை உணர்...நாளை என்று அல்லாது இன்றே இப்போதே.**

பெருந்தன்மை இறையின் இயல்பு. அரசனானலும் ஆண்டியானாலும் இருவருமே பெருந்தன்மையை உணர முடியும் .நீங்கள் தாராளத்தை உணரும் போது உங்களுடைய வாழ்க்கை பரிவும் அன்பும் நிறைந்து அபரிமிதமாகிறது.

**கேள்வி:** பெருந்தன்மை என்பதும் நன்றியுடையவர்களாயிருப்பதும் ஒன்றா?

**ஸ்ரீஸ்ரீ:**இல்லை எப்போதும் நன்றியுணர்வு என்பது தன்னை பற்றி அக்கறையுடையது.நீங்கள் ஏன் நன்றியுடையவராக இருக்கிறீர்கள் ? ஏனெனில் நீங்கள் எதையோ பெற்றுள்ளதற்கும் அல்லது பெறப்போவதற்கும் நன்றியுடையவனாயிருக்கிறீர்கள்.

புறச சூழநிலைகளின தாககம இலலாது தனிததிருபபது பெருந்தன்மை.வேறு யாரும் உங்களுடைய பெருந்தன்மை.வேறு யாரும் உங்களுடைய பெருந்தன்மையை நஙகள உணருமட படி செயய முடியாது. அது நஙகளாகவே உணர வேண்டிதொன்று.பெருந்தன்மை மெய்யறிவின் ஒருநிலை .பெருந்தன்மை ஒரு செயல் அல்ல.ஆனால் அதன் வெளிப்பாடு எப்போதும் செயலாக வடிவெடுக்கிறது.

**கேள்வி:** தீவிரப்பற்று(passion) பற்றிய கருத்து என்ன?

**ஸ்ரீஸ்ரீ:**தீவிரப் பற்று பற்றாக்குறையைச் சுட்டுகிறது: பற்றற்றதன்மை அபரிமிதம் .ஆனால் பெருந்தன்மையற்ற பற்றற்ற தன்மை உங்களில் சுயநலத்தையும் வரட்சியையும் ஏற்படுத்துகிறது.

கடந்த காலத்தில் என்ன செய்திருக்கிறோம் என்று யோசிக்காதீர்கள் அது நாம் தான் இதைச் செய்தோம் அதைச் செய்தோம் என்று எண்ணச் செய்கிறது. பெருந்தன்மையை மாத்திரம் உணருங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### முன் ஜென்ம பாவங்களை போக்க என்ன செய்ய வேண்டும்?

**ஆடைகள் தானம்**

ஒருவர் நோய் நொடியின்றி வாழவும், தன் குழந்தைகளுக்கு பிரச்சினை வராமல் இருக்கவும் ஆடைகள் தானம செயவது சிறநத பரிகாரமாகும.

ஆடைகள் தானம் செய்வதன் மூலம் பெண்களிடம் நலலுறவு, சுப யோக பாகய விருதது, உடல வலிமை ஆகியவை உண்டாகும். இந்த தானம் பிறந்த நட்சத்திர தினத்தில் செய்வதால் கூடுதல் பலன் உண்டாகும்.

**தப தானம**

கண பிரசசினை, கோளாறு இருபபவரகள, பௌர்ணமி நாளன்று அம்மன் கோயிலில் 10 நெய் தபஙகளை ஏறறுவது மிக சிறநத விடயம.

**தேன் தானம்**

நீண்ட நாட்களாக புத்திர பாக்கியம் இல்லாதவர்கள், கர்பபப்பை பிரச்சினை உள்ளவர்கள், தாரா பலன் உள்ள நட்சத்திர தினத்தன்று, வெண்கல கிண்ணத்தில் சுத்தமான தேனை அளிப்பது சிறந்தது. விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

**சிவப்பு நிற வளையல்**

உஙகள வாழகைகத துணையை மனம வருநத செய்ததாக நினைத்தால், திருமணமான மூன்று பெண்களுக்கு சிவப்பு நிற வளையல்களை வாங்கி தானமாக கொடுக்க வேண்டும்.

**பால் தானம்**

உங்கள் தெருவில் உள்ள நாய்களுக்கு 5 நாட்கள் குடிதறகு பால கொடுததால, அது கணகளுககு தெரியா...ச்சத்தையும், கவலையையும் நீக்கும். (முற்றும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

இராமாயணமும் மகாபாரதமும் உண்மையில் நடந்த வரலாறுகள் தான். இராமாயண வரலாற்றை புறநானூறு, அகநானூறு, பரிபாடல் முதலிய சங்க நூல்கள் கூறுகின்றன.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நாலாயிரம் திவ்விய பிரபந்தம் முதலிய அருள் நூல்கள் கூறுகின்றன.

**“ அடுத்தானை உரித்தானை அர்ச்சுனர்க்கும் பாசுபதம் கொடுத்தானை”**

என்பது தேவாரம்.

திருக்குர் ஆன் பொய் கூறுகின்றது என்று ஒரு முஸ்லிம் அன்பர் கூறுவாரா? பைபிள் பொய் கூறுகிறது என்று ஒரு கிறிஸ்தவர் கூறுவாரா? கூறமாட்டார் அல்லவா?

ஆகவே இறைவனை நேரில் கண்ட பரமஞானிகள் திருவாய் மலர்ந்த தேவாரம், திருப்புகழ், பிரபந்தங்களில் பேசப்படுகின்ற இராமாயணம், பாரதம் கட்டுக்கதை என்று கூறுவது எம்தாயை நாமே பழிப்பதாகும்.

# பெர்த் மைதானம் ஒரு கண்ணோட்டம்



உலகின் அதிவேக ஆடுகளமான பெர்த் மைதானத்தில் இந்திய அணி 4 டெஸ்டில் விளையாடி ஒன்றில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

2008ஆம் ஆண்டு கும்ப்ளே தலைமையிலான இந்திய அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த டெஸ்டில் ராகுல் டிராவிட், டெண்டுல்கர், வி.வி.எஸ்.லட்சுமணன் ஆகியோரது துடுப்பாட்டமும், ஆர்.பி.சிங், இர்பான்பதான், கும்ப்ளே ஆகியோரது பந்து வீச்சும் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது.

இந்திய அணி பெர்த் மைதானத்தில் 3 டெஸ்டில் தோற்றுள்ளது.

1977ஆம் ஆண்டு பிஷன்சிங் பெடி தலைமையிலான அணி 2 விக்கெட் வித்தியாசத்திலும், 1992 ஆம் ஆண்டு அசாருதீன் தலைமையிலான அணி 300 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 2012ஆம் ஆண்டு டோனி தலைமையிலான அணி இன்னிங்சில் மற்றும் 37 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தோற்றது.

அவுஸ்திரேலிய அணி பெர்த் மைதானத்தில் 44 டெஸ்டில் விளையாடி 25 இல் வெற்றி பெற்றது.

11 டெஸ்டில் தோற்றது. 8 டெஸ்ட் 'சமநிலை' ஆனது. கடைசியாக 2017 ஆம் ஆண்டு இந்த மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலியா இன்னிங்ஸ் வெற்றி பெற்று இருந்தது.

அவுஸ்திரேலியா 6 விக்கெட் இழப்புக்கு 735 ஓட்டங்கள் குவித்ததே (2003) இந்த மைதானத்தில் அதிகபட்ச ஸ்கோராகும். இந்திய அணி 400 ஓட்டங்கள் குவித்ததே



அதிக பட்சமாகும்.

பாகிஸ்தான் 62 ஓட்டங்களில் சுருண்டது குறைந்த பட்சமாகும். அவுஸ்திரேலிய அணி 76 ஓட்டங்களும், இந்தியா 141 ஓட்டங்களும் குறைந்தபட்சமாக எடுத்தன. (க)

# அடிச்சுத் தூக்கிய அஜித் ரசிகர்கள்





தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் டுவிட்டரில் என்ன நடக்கிறது? என கேள்வி கேட்ட கேள்விக்கு, மூச்சு திணற, திணற அஜித் ரசிகர்கள் விஸ்வாசம் பட அடிச்சு தூக்கு பாடல் போஸ்டரை பதிவு செய்து மிரண்டு போக வைத்துள்ளனர்.நடிகர், அஜித்தின் திரைப்படம் குறித்து எந்த தகவல் வந்தாலும் அவரது ரசிகர்கள் அதை டுவிட்டரில் டிரண்ட் செய்து உலகையே திரும்பி பார்க்க வைத்து வருகின்றனர்.

அந்த வகையில் விஸ்வாசம் படத்தின், 'அடிச்சு தூக்கு' பாடல் கடந்த 10ஆம் திகதி 7 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டர் அறிவிப்பு வெளியிட்டது.அந்த போஸ்டரை அஜித் ரசிகர்கள் டுவிட்டரில் பரப்பினர்.

இந்நிலையில் டுவிட்டர் ட்ரெண்டை பார்த்து தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின், "டுவிட்டரில் என்ன நடக்கிறது?" என கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு தல ரசிகர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், அடிச்சு தூக்கு போஸ்டரை ஸ்டெயின் பக்கத்தில் பதிவிட்டும், அஜித் குறித்து பதிவிட்டனர்.

இதனால் விஸ்வாசம் பட ட்ரெண்ட் இந்தியா மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் கவனிக்கப்பட்ட விடயமாக மாறியது. (க)




*2018 இற்கான ஜப்பான் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 09 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் எஸ்.எஸ்.கே.ஏ.கராத்தே கழகம் சார்பாக 13 வயதுப்பிரிவில் பங்கு கொண்ட யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜே.மிதுலன் காட்டா போட்டியில் முதலாம் இடத்தையும் குமித்தேயில் மூன்றாம் இடத்தையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.(க)*

# இரண்டாவது டெஸ்ட் போட்டி அஸ்வின் -சர்மாவுக்கு ஓய்வு



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய மண்ணில் சாதனை படைத்த உற்சாகத்தில் உள்ள இந்திய வீரர்கள், 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு தயாராகி வருகின்றனர்.

முதல் போட்டியில் துடுப்பாட்ட வீரர்களை விட பந்துவீச்சாளர்களே ஆதிக்கம் செலுத்தினர். குறிப்பாக இஷாந்த் சர்மா, பும்ரா, அஸ்வின் ஆகியோர் அவுஸ்திரேலியாவுக்கு கடும் நெருக்கடி அளித்தனர்.

அதேபோல் இந்த போட்டியிலும் வெற்றி பெற தீவிர பயிற்சி மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியை பிசிசிஐ அறிவித்துள்ளது. 13 வீரர்கள் கொண்ட இந்த பட்டியலில் அஸ்வின், ரோகித் சர்மா ஆகியோர் இடம்பெறவில்லை. காயம்காரணமாக அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

அணி வபரம்: விராட் கோலி (கப்டன்), முரளி விஜய், கே.எல். ராகுல், புஜாரா, ரகானே (துணை கப்டன்), ஹனுமா விகாரி, ரிஷப் பந்த் (விக்கெட் கீப்பர்), ரவீந்திர ஜடேஜா, இஷாந்த் சர்மா, முகமது ஷமி, ஜஸ்ப்ரித் பும்ரா, புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதவ்.

அவுஸ்திரேலியா-இந்தியா மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நாளை தொடங்க உள்ளது. (க)

# என் தலைமைப் பதவியை காத்தவர் வி.வி.எஸ்.லட்சுமண்

## கங்குலி உருக்கம்



இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் 2001ஆம் ஆண்டு கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் மோதிய டெஸ்ட் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது.

இந்த டெஸ்டில் 'பாலோ' ஒன் ஆகி கங்குலி தலைமையிலான இந்திய அணி 171 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதற்கு வி.வி.எஸ். லட்சுமண் முக்கிய பங்கு வகித்தார். அவர் 631 நிமிடங்கள் களத்தில் நின்று 452 பந்துகளை சந்தித்து 281 ஓட்டங்களை குவித்தார்.

ராகுல் டிராவிட் 446 நிமிடம் களத்தில் நின்று 353 பந்துகளை சந்தித்து 180 ஓட்டங்கள் எடுத்தார். இருவரும் இணைந்து 5ஆவது விக்கெட்டுக்கு 376 ஓட்டங்கள் எடுத்து அணியை தோல்வியில் இருந்து தவிர்த்து வெற்றி பெற வைத்தனர்.

281 ஓட்டங்களை குவித்த இந்த டெஸ்ட் குறித்து லட்சுமண் சுயசரிதை புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். இந்த புத்தகம் வெளியிட்டு விழா கொல்கத்தாவில் நடந்தது.

இதில் முன்னாள் தலைவர் கங்குலி, ஜாகீர்கான் பங்கேற்றனர்.

வி.வி.எஸ்.லட்சுமண் 2001ஆம் ஆண்டு கொல்கத்தா டெஸ்டில் சிறப்பாக ஆடி இருக்காவிட்டால் நாங்கள் தொடரை இழந்து இருப்போம்.

எனது கப்டன் பதவியும் பறி போய் இருக்கும். லட்சுமண் 281 ஓட்டங்கள் குவித்து எனது தலைவர் பதவியை காப்பாற்றினார் என்றார் கங்குலி. (க)

## நீதிமன்றத்தின் தீர்...

யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்

சட்டம் நீதி உள்ளிட்ட ஆகிய துறைகள் ஜனநாயகத்தின் முக்கிய தூண்களாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும். ஆனால் விசேட வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென பாராளுமன்றத்தை கலைத்தமை ஊடாக மக்கள் ஆணை மீறப்பட்டிருந்தது.

அதனை பாதுகாப்பதற்கு முன்வந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். இதிலிருந்து நாம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அரசாங்கத்தை அமைக்க வேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்துள்ளோம். எனவே அரசாங்கத்தை அமைத்து அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்கொண்டு செல்ல வேண்டும் என அழைப்பு விடுத்தார். (ம)

## பாராளுமன்ற...

பாராளுமன்றத்தை கலைப்பதாக நவம்பர் 9-ம் திகதி விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்த அறிவித்தலை எதிர்த்து நவம்பர் 12-ம் திகதி அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட 13 தரப்புக்கள் தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதிமன்றம், பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்புக்கு நவம்பர் 13-ம் திகதியன்று இடைக்காலத் தடையினை விதித்தது.

மேற்படி வழக்கினை பிரதம நீதியரசர் நளின் பெரேரா தலைமையில் நீதியரசர்களான புவனகே அலுத்விகார, சிசிர டி அப்றூ, பிரியந்த ஜயவர்த்தன, பிரசன்ன ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெனாண்டோ ஆகியோரைக் கொண்ட குழு விசாரித்து வந்த நிலையில், நேற்றைய தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், பாராளுமன்றத்தைக் கலைப்பதாக ஜனாதிபதி அறிவித்தது, அரசியலமைப்புக்கு முரணானது என்று நேற்று வியாழக்கிழமை உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாலரை வருடத்துக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்தமை, அரசியலமைப்புக்கு விரோதமானது என தீர்ப்பில் தெரிவித்த பிரதம நீதியரசர், அவ்வாறு ஜனாதிபதி முன்கூட்டி கலைப்பதாயின், அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார். (ம)

## ரணிலுடன் இணை...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்று நாட்டின் பாதுகாப்புக் கருதியே மேற்கண்ட தீர்மானத்தை தான் எடுத்ததாகவும் உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் மகிந்த தரப்பின் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை முடிந்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## கடும் கோபத்துட...

முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர் நீதிமன்ற தீர்ப்பினை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

பிரதமர் பதவியை வழங்க மறுக்காத போதிலும் ரணிலுடன் பேச்சுவதற்கு விருப்பம் இல்லை. அவர் மீது கடும் கோபத்தில் ஜனாதிபதி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டிருக்கும் தரப்பினருக்கு ஆட்சி அமைக்க அனுமதி அளிப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி மைத்தி...

கிரமசிங்கவை பிரதமராகவும் கட்சியால் முன்வைக்கப்படுவோரை அமைச்சர்களாகவும் நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 24 மணித்தியாலங்கள் காலக்கெடுவை விதிக்கின்றோம் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் முன்னணியின் முக்கிய கலந்துரையாடல் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றிரவு அலரிமாளிகையில் இடம்பெற்றது. அதன் பின்னரே அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்தக் கருத்தை முன்வைத்தார். (ம)

## சூழ்ச்சிக்கு எதிரா...

கருத்தில் கொண்டு அரசியல் அமைப்பிற்கு அமைவான முறையில் ஜனாதிபதி அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமாரதிசாநாயக்க, மகிந்த - மைத்திரியின் சூழ்ச்சிக்கு எதிராக உயர் நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


கிடைக்கப்பெற்ற தீர்வினை கருத்தில் கொண்டு அரசியல் அமைப்பிற்கு அமைவான முறையிலான ஜனாதிபதி அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் இத்தகைய ஜனாதிபதியின் அரசியல் அமைப்பு மீறலான செயலுக்கு சிறந்த தீர்வை மக்கள் பெற்றுக்கொடுப்பர் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம)

## அரசி...

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியுடன் பேசிய பின்னரே, தாங்கள் அடுத்த முடிவினை எடுக்க தீர்மானிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# மரண அறிவித்தல்



மலர்வு 11 . 07 . 1931

உதிர்வு 12 . 12 . 2018

## செல்லப்பா பேரின்பம்

(முன்னாள் உரிமையாளர் Yoga Trading Co., Dam Street, Col-12)

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா பேரின்பம் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2018) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், விஜயசுந்தரம் (சுவிஸ்), பராசக்தி (கனடா), காலஞ்சென்றவர்களான கனகம்மா, புவனேஸ்வரி, பத்மநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானவதி (கனடா), சரஸ்வதி, குகேந்திரன், கனகேந்திரன், கிருபானந்தன் (சுவிஸ்), யோகவதி, கிருஷ்ணகுமார் (லண்டன்), மதிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (கனடா), குகதரன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சரோஜினி, மோகனா, வதனி (சுவிஸ்), வித்தியா (லண்டன்), தயானா ஆகியோரின் அன்பு மாமனாரும், தரணீகரன், கிரிவதனன், பிரியதர்ஷினி, சுஜிதா, கார்த்தீபன், நிஷாந்தன், நிருஷிகா, பிரஷாந், சாருஜா, தனஞ்சயா, அருண்பிரசாந்த், இலக்கியா, கோபிகா, கோகுலன், அபிநயா, சசானா, சபித்தா, சஜித், கிரிஷாந், அனுஷன், தானியா, ஆரவ், அக்ஷரன், ஆருத்ரன், ஆதிரா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்திலும் (இல.09, றிஜ்வே பிளேஸ், கொழும்பு-04) நாளை (15.12.2018) சனிக்கிழமை ஜெயரட்ணா மலர்ச்சாலையிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.09, Ridgeway Place,
Colombo - 04.

தகவல்: மக்கள், மருமக்கள், குடும்பத்தினர். 011 258 5489


## இந்திரா கொன்ஸ்ரக்சன்ஸ்



எமது சேவைகள்

01. புது வீடு கட்டுதல்
02. குறையாக கட்டிவிடப்பட்ட வீடுகள் பூரணப்படுத்தல்.
03. பழைய வீடுகள் நவீன முறையில் புனரமைப்புச் செய்தல்.
04. வீட்டுடன் இணைந்த நவீன குளியலறை (Bathroom) அமைத்தல்.
05. தண்ணீர் தாங்கி (Tank) கட்டுதல்.
06. பிளாற் (SLAB) போடுதல்.
07. வீட்டிற்கு கூரை போடுதல்.
08. நிலத்திற்கு மாபிள் (Tile) பதித்தல்.
09. வீட்டிற்கு மட்ட சீற் அடித்தல்.
10. மதில் கட்டுதல்.

குறிப்பு: தேவையாயின் வங்கி கடன் ஒழுங்கு படுத்தப்படும்.

(6701)

Tel: 0774163146 - Viber: 0786371396
பலாலி வீதி, கோண்டாவில்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 1532

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/12/13 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3810 |

ஆங்கில எழுத்து: B — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 0 8 8 3 5

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.12.13 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1972 |

ஆங்கில எழுத்து: H — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 06 28 75 78

தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 1522 — திகதி: 2018/12/13

M I C

வெற்றி இலக்கங்கள்: 46 50 55 57 — போனஸ் இலக்கம்: 52

தேசிய லொத்தர் சபை

### நீரோகா

| | |
|---|---|
| திகதி | 2018/12/13 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 485 |

| லக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| மேஷம் | 16 | 33 | 35 | 45 | 13 |

தேசிய லொத்தர் சபை

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-4653)



வாகனம் விற்பனைக்கு
ISUZU ELF, 14 1/2 அடி, 41-XXXX
Power Steering
Rs 1,190,000/=
தொடர்புகளுக்கு : 072 572 5620
(C-4690)


## ஐ.தே.கவுடன்...

ஐக்கியதேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆவணமெதிலும் கைச்சாத்திடவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கை தமிழரசுக் கட்சி-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகிய நானும் இணைந்து கைசாத்திட்டதாக தெரிவிக்கும் ஆவணமொன்று வெளியாகியுள்ளது.

ஐக்கியதேசிய கட்சி தலைவருடன் இணைந்து நான் அவ்வாறான ஆவணம் எதிலும் கைச்சாத்திடவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவ்வாறான ஆவணம் போலியானது என்பதையும்நான்தெரிவிக்க விரும்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)


FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 07.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
ராகவன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
முருகநிரோஜன் (யா/வயாவிளான் ம.கல்லூரி)
மதுசூதன் (யாழ் பல்கலைக்கழகம்)
பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)
அருண்குமார் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி)
சிவஜன் (தொழில்நுட்பக் கல்லூரி)
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio -T
திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
ஜெயந்தன்
பொன் சிவகுமார்
(C-4701)
ICT
லவன் (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
உமாகாந்தன் BIT (யா/மத்தியகல்லூரி)
புவியியல் ஜெனகன் (J.H.C)
சித்திரம் ஜெயந்தன் (J.H.C)
வணிகக்கல்வி தீசன்
விவசாய விஞ்ஞானம் சாரங்கன்
ஊடகக்கல்வி கோணேஸ்
கணக்கீடு சுகிர்தன்
கணிதம் தயாளன்
பொருளியல் பிரதீபன்
077 017 5346 கிளைகள் : புத்தூர், யாழ்ப்பாணம்.



NEW SCIENCE WORLD
VICTORY MUST
NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna.
Telephone: 077 336 4055, 021 221 6690

G.C.E (A/L) 2021 SCIENCE STREAM

தமிழ்மொழி மூலம்
பௌதிகவியல் : திரு.R.குமரன்
திரு.R.குகன்
இரசாயனவியல் : திரு.டயஸ்
திரு.K.T.சிவகுமார்
உயிரியல் : திரு.N.T.கஜேந்திரன்
இணை. கணிதம் : திரு.S.S.செந்தில்ராஜ்

English Medium
Physics : Mr.R.Kumaran
Chemistry : Mr.Dias
Biology : Mr.N.T.Gajenthiran
Com.Maths : Mr.S.Krishna
(C-4700)

ஆரம்பம் : இன்று 14.12.2018 வெள்ளி காலை 7.00 மணி
அனுமதிகளை காலை 6.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.